


35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 17 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 01, 2025

## கனடியப் பிரதமரின் ஐரோப்பிய பயணம்

கனடியப் பிரதமர் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு நட்பு நாடுகளின் தலைவர்களைச் சந்திப்பதற்காக கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவிற்கு பயணம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக ஊடகங்களின் கலந்துரையாடலின்போது 2025 ஒகஸ்ற் 22ஆம் திகதி தெரிவித்தார். பிரதமர் ஜேர்மனி, போலந்து மற்றும் லாட்வியா (Latvia) நாடுகளுக்குப் பயணம் செய்வார் எனவும் அங்கு அவர் முக்கிய வணிக மற்றும் அரசியல் தலைவர்களையும், அப்பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டுள்ள கனடியத் துருப்புக்களையும் சந்திப்பார் என அப்போது ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

உக்ரைன் நாட்டின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக கனடியப் பிரதமர் மார்க் காணி திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டு ஒகஸ்ற் 24ஆம் திகதி உக்ரைன் நாட்டின் தலைநகர் கெய்வ்விற்குச் (Kyiv) சென்றார். அங்கு அவர் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி (Volodymyr Zelenskyy)உடன் இணைந்து உக்ரைன் சுதந்திரதின நிகழ்வுகளில் பங்குபற்றினார்.

கெய்வ் நகரில் உள்ள சோபியா சதுக்கத்தில் (Sophia Square) நடைபெற்ற சுதந்திரதின விழாவில் உரை யாற்றிய கனடியப் பிரதமர், "ரஷ்யாவின் பொருளாதாரம் பலவீனமடைந்து வருவதால் புடின் (Putin) மேலும் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறார். சமாதானத்திற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்குவதில் மாற்றத்தை ஏற்படுத்தும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் தலைமைத்துவத்தை நான் பாராட்டுகிறேன். உக்ரைனுக்கான கனடாவின் ஆதரவு அசைக்க முடியாத அளவு உறுதியாக உள்ளது. உங்கள் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும், உங்கள் நாட்டிற்கான உங்கள் கனவுகளை நனவாக்குவதற்கு நீங்கள் நடத்தும் போராட்டத்தில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியிலும் நாங்கள் உங்களுடன் உங்களுக்கு ஆதரவாக இருக்கிறோம்" என்றார். உலகிலேயே இரண்டாவது அதிகமான உக்ரேனியர்களைக் கொண்ட நாடாக கனடா இருக்கிறது. போலந்து (Poland)இற்கு அடுத்தபடியாக கனடாவில் 1.3 மில்லியனுக்கு மேற்பட்ட உக்ரேனியர்கள் வாழ்கின்றனர்.

முதலாவது உக்ரேனிய குடியேற்றம் கனடாவின் கிழக்குக் கடற்கரையில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடைபெற்றது. அப்போது அவர்கள் விவசாயிகளாகவும் மற்றும் பொருளாதார வாய்ப்புகளைத் தேடும் தொழிலாளர்களாகவும் கனடாவிற்கு வந்தனர். அவர்கள் விவசாயத்திற்கு வளமான நிலங்களைக் கொண்ட மனிற்றோபா, சஸ்கச்சுவான் மற்றும் அல்பேட்டா மாகாணங்களில் குடியேறினர். தற்போது அல்பேட்டா


Canadian Prime Minister Mark Carney with Ukrainian President Volodymyr Zelensky.

மாகாணத்திலேயே அதிகப்படியான உக்ரேனியர்கள் வாழ்கின்றனர். 1991 டிசம்பரில் உக்ரைனை ஒரு நாடாக அங்கீகரித்த முதல் மேற்கத்திய நாடாக கனடா இருக்கிறது. அத்துடன் ரஷ்ய படையெடுப்பு பாளர்களை விரட்ட உக்ரைனின் இராணுவத்திற்கு கனடா பயிற்சியளித்து வருகிறது. நேட்டோவின் ஒப்பரேஷன் யுனிஃபையர் (Operation Unifier) மூலம் கனடா இதுவரை 45,000 உக்ரேனியத் துருப்புகளுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் மிகவும் மோசமான மோதலை உருவாக்கிய ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பு 2022 பெப்ரவரியில் ஆரம்பமான பிற்பாடு கனடா இதுவரை 300,000 உக்ரேனியர்களுக்கு அடைக்கலம் அளித்துள்ளது.

கனடியப் பிரதமர் உக்ரைன் பயணத்திற்கு முன்னர் ஒகஸ்ற் 17ஆம் திகதி உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் இணைந்து உக்ரைனிற்கு 'உதவி செய்ய விரும்பும் நாடுகளின்' (Coalition of the Willing) கூட்டணியின் மெய்நிகர் இணைய வழிக் கூட்டத்தில் பங்கேற்றார். அக்கூட்டத்தில் கனடியப் பிரதமர் உக்ரைனுக்கான கனடாவின் ஆதரவையும், உக்ரைனின் அமைதி மற்றும் அதன் பாதுகாப்பிற்கான கனடாவின் உறுதி மொழியையும் வலியுறுத்தி கனடா அதிபர் மற்றும் நட்பு நாடுகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது என்றார். அத்துடன் மார்க் காணி உக்ரைனுக்கான கனடாவின் சமீபத்திய ஆதரவான $2 பில்லியன் புதிய இராணுவ உதவி வழங்குதல் மற்றும் 2024 ஒக்ரோபரில் G7 மாநாட்டில் எடுத்த "G7 நாடுகளில் உள்ள ரஷ்யாவின் சொத்துக்களை முடக்குவதன்மூலம் வரும் பணத்தில் இருந்து உக்ரைனுக்கு கடன் வழங்குதல்" என்ற முடிவுக்கு அமைய கனடாவும் $2.3 பில்லியனை உக்ரைனுக்குக் கடனாக வழங்குதல் பற்றியும் கூறினார். அவர் மேலும் ரஷ்யா மற்றும் அதன் ஆதரவாளர்களுக்கு எதிராக கனடா சமீபத்தில் விதித்த தடைகள் பற்றியும் விளக்கினார்.

அத்துடன் இந்தக் கூட்டத்தில் 'உக்ரேனிய குழந்தைகள் திரும்புவதற்கான சர்வதேச கூட்டணி' அமைப்பின் இணைத் தலைவர்களான கனடாவும், உக்ரைனும் உக்ரைனிலிருந்து சட்டவிரோதமாக நாடு கடத்தப்பட்ட அல்லது வலுக்கட்டாயமாகக் கூட்டிக் கொண்டு சென்ற உக்ரேனியக் குழந்தைகளை உடனடியாகவும், நிபந்தனை இன்றியும் திருப்பி அனுப்ப வேண்டும் என்று ரஷ்யாவிற்கு மீண்டும் அழைப்பு விட்டன. ரஷ்யா-உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் குழந்தைகளின் அவலநிலையைக் கருத்தில் கொள்ளுமாறு அமெரிக்காவின் முதல் பெண்மணி மெலனியா ட்ரம்ப் (Melania Trump) ரஷ்ய அதிபர் புடினுக்கு விடுத்த புதிய வேண்டுகோளை கனடா வரவேற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உக்ரைன் பயணத்தின்போது கெய்வ் நகரில் உள்ள சோபியா சதுக்கத்தில் கனயடிப் பிரதமர் உரையாற்றும்போது கனடாவின் $2 பில்லியன் புதிய இராணுவ உதவியின் விபரங்களை வெளியிட்டார்.

கனடாவில் இருந்து கவச வாகனங்கள் மற்றும் மருத்துவப்பொருட்கள் போன்றவை வாங்குவதற்கு $600 மில்லியன் பாவிக்கப்படும்.

நேட்டோ மூலம் அமெரிக்காவிடம் இருந்து உக்ரைன் போரில் பாவிக்கப்படும் முக்கியமான உபகரணங்கள் வாங்குவதற்கு $500 மில்லியன் பாவிக்கப்படும்.

ட்ரோன்கள் மற்றும் எதிரியின் ட்ரோன்களை எதிர்த்து அழிக்க உதவும் எதிர்-ட்ரோன்கள் (Counter-drone) அத்துடன் மின்னணு போர்த்திறன்களுக்கு $160 மில்லியன் முதலிடப்படும்.










உக்ரைன் பாதுகாப்புக் குழுவில் கனடாவின் பணிகளை மேற்கொள்ள $120 மில்லியன் முதலிடப்படும்.

Czech நாட்டின் முயற்சியில் வெடி மருந்துகள் தயாரித்து உக்ரைனுக்கு வழங்க $72 மில்லியன் பாவிக்கப்படும்.

இவற்றைவிட மனிதாபிமான உதவிகளை வழங்க $22.4 மில்லியன் முதலிடப்படும். இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போது கனடியப் பிரதமர் மார்க் காணி, உக்ரைனில் போர் நிறுத்தம் ஏற்பட்டால் அப்போர் நிறுத்தத்தை நிலைநாட்ட கனடா தனது துருப்புகளை அனுப்பும் என பகிரங்கமாக உக்ரைன் மக்களுக்கு உறுதி அளித்தார்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து கனடா-உக்ரைன் கூட்டுப் பாதுகாப்பு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

# House for Sale / Lease / Condo / BSMT

## Free Hold TH Sale

* 4 Bed Room
* 3 Washroom
* Basement finished & Kitchen
* Separate Entrance
* Completely Renovated
* Easy Access to Hwy, TTC, Schools

(Finch & Pharmacy)

Asking, Call.. George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Rent

- 2 Bed Room Condo
- 2 Full Washrooms
- Newly Painted
- 2 Parking

Walking Distance to Kennedy Subway

Day care in the Building

Kennedy / Eglinton

Tisi Para **
Call : 647 296 0596

## Detached Home for Sale

3 Bed Room Renovated
(West Rouge Neighbour hood - Toronto)

Walk to Beach....
Go Station
and TTC

Please Call.......
Amal Joseph*
Call : 416 300 8294

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc. Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ரணில் கைது – மருத்துவனையில் அனுமதி!

– அரவின் –

அனுர அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை திட்டம் போட்டு, சிறைக்குள் சிக்கவைத்து, தானும் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறது.

ஒகஸ்ற் 22, 2025ஆம் திகதி வெள்ளிக் கிழமை அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (சிஐடி) விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

சிஐடி விசாரணைக்கு முன்னிலையாகும் அவர், கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்படுவார் என சில நாட்களுக்கு முன்னரே, சுதா எனப்படும், சுதத திலகசிறி என்ற யூடியூப்பர், காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க வெள்ளிக்கிழமை கைது செய்யப்படாவிட்டால், தனது யூடியூப் சனலை தான் மூடுகிறேன் என்று மேசையில் தட்டி சவால் விட்டார் அவர்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன போல, ரணில் ஓடி ஒளிந்து கொள்ள வில்லை. யூடியூப்பர் சுதா கூறியது போலவே, வெள்ளிக்கிழமை விசாரணைக் குச் சென்று வசமாக மாட்டிக் கொண்டார்.

வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டால், பிணையில் விடுவிக்கப்பட்டாலும், அடுத்த இரண்டு நாட்களும் விடுமுறை நாட்கள் என்பதால், சிறைச்சாலையில் இருந்து வெளியே வர முடியாது. எப்படியாவது ரணிலை சிறைக்குள் தள்ளு வது என்ற நோக்குடன், மிகவும் திட்ட மிட்டு இந்த கைது மேற்கொள்ளப்பட்டது. அதைவிட கைது செய்யப்படும் ரணிலை, பிணையில் வெளிவர விடாமல் தடுத்து வைப்பதும்கூட, ஏற்கனவே போடப்பட்ட திட்டம்தான்.

ஜனாதிபதி அனுரவுக்கு மிகவும் நெருக்க மான யூடியூப்பர் சுதத திலகசிறிக்கு தகவல் தெரியும் அளவுக்கு அந்தத் திட்டம் அமைந்திருந்தது.

வெள்ளிக்கிழமை காலை விசாரணைக்கு முன்னிலையான ரணில், அன்று பிற்பகல் 3 மணியளவில் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.



நீதிவான் நிலுபுலி லங்காபுர, அந்த வழக்கை உடனடியாக விசாரித்து, அவருக்கு பிணை வழங்குவதா - இல்லையா என்று தீர்மானித்திருக்கலாம். ஆனால் அவர், அரை மணி நேரம் கழித்து விசாரிப்பதாகத் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து, நீதி அமைச்சில் இருந்து அல்லது அரசாங்கத்திடம் இருந்து அவர், ஏதேனும் அறிவுறுத்தல்களைப் பெற்று இருக்கலாம் அல்லது பெறுவதற்கு முயன்றிருக்கலாம்.

நீதிவான், விசாரணையை ஆரம்பிக்க இருந்தபோது நீதிமன்றம் இருளில் மூழ்கியது.

தடைப்பட்ட மின்சாரம் ஒன்றரை மணி நேரம் கழித்து திரும்பி வருவதற்குள், இருள் சூழ்ந்து விட்டது. அதன்பின்னர், தொடங்கிய விசாரணையில், ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணிகள் பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ், அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இரவு 10 மணிவரை நீடித்த விசாரணைகளைத் தொடர்ந்து, ரணில் விக்கிரம சிங்கவை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இரவு காலம் தாழ்த்தி விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றபோது, ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக போராட்டம் நடத்த யாரும் வரமாட்டார்கள் என்பது அரசாங்கத்துக்கு தெரியும். ஆனாலும் தகவல் அறிந்து கூடிய அவரது ஆதரவாளர்கள் எதிர்ப்பு கோசங் களை எழுப்ப விசேட அதிரடிப் படை யினரையும் கலகம் அடக்கும் பொலிசாரை யும் தயார் நிலையில் வைத்திருந்த அரசாங்கம், அவர்களை அடக்கி விட்டது.

ரணில் விக்கிரமசிங்கவை வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு சென்றபோது, இரவு 11 மணிக்கு மேலாகி விட்டது. சிறைச்சாலையில் ரணில் விக்கிரமசிங்கவை அடைப்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். ஆனாலும், அதற்கு முன்னர், அவரது உடல் நிலையைப் பரிசோதிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. அது வழக்கமான செயற்பாடு.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதிமன்றத்தில் பிணை கோரிய அவரது சட்டத்தரணிகள், அவருக்கு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நோய் இருப்பதாகக் கூறியிருந்தனர்.

சிறைச்சாலை மருத்துவமனையில், மேற் கொள்ளப்பட்ட பரிசோதனைகளை அடுத்து, அவர் நள்ளிரவு 12 மணி தாண்டிய பின்னர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அப்பொழுது ரணில் விக்கிரமசிங்க, மிகவும் களைத்து, சோர்ந்து போயிருந்தார். கண்கள் வீங்கி சிவந்து போயிருந்தன. இரத்த அழுத்தமும், இரத்தத்தில் குளுக்கோஸ் அளவும் அதிகரித்திருந்தன. காலையில் சிஐடியின் விசாரணையில் இருந்தபோதும், நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட பின்னரும், நீர் அருந்தவோ உணவு உணவோ இல்லை. அதனால் அவருக்கு நீரிழப்பு ஏற்பட்டிருந்தது.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் மறுநாள் காலைவரை, இரத்த அழுத்தம் மற்றும் குளுக்கோஸ் அளவு என்பன குறையவில்லை. இதனால் அவசர அவசரமாக கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சற்று நேரத்திலேயே தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். முன்னர் பசில் ராஜபக்ச கைது செய்யப் பட்ட தருணங்களில் எந்த நோய்க் குறியும் இல்லாமலேயே தேசிய மருத்துவமனையில் வாரக்கணக்கில் தங்கியிருந்தார்.

அவரது விளக்கமறியலை நீடிக்க நீதிவான் மருத்துவமனைக்கு சென்ற சந்தர்ப்பங் களும் இருந்தன. அப்படித்தான் ரணில் விக்கிரமசிங்கவும், தேசிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதாக பலரும் நம்பினர். ஆனால் ரணிலின் நிலை மோசம் அடைந்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்வது தொடக்கம் சிறைக்குக் கொண்டு செல்வது வரைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் படியே நடந்தது. ஆனால் அதற்கு அடுத்ததாக அவரை சிறைக்கூண்டுக்குள் அடைக்கும் திட்டம் பிசுபிசுத்துப் போய் விட்டது.

ஒரு நாளாவது அவரை சிறைச்சாலை கூண்டுக்குள் தள்ள வேண்டும் என்று அனுரவின் அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலை அதற்கு இடமளிக்கவில்லை.

சிறைக்காவலில் இருக்கின்றபோது ஏதேனும் நடந்துவிட்டால் அதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டி இருக்கும். அதை விட அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் இருந்திருப்பர். அதனாலேயே அந்தத் திட்டம் குழம்பியது.

ரணில் கைது செய்யப்பட்ட விவகாரம் இரண்டு வேறு கருத்துகளைத் தோற்றுவித் திருக்கிறது. சரி என்றும், தவறு என்றும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மிகப்பெரிய ஊழல் குற்றச்சாட்டில், அவர் கைது செய்யப்படவில்லை. அவருக்கு எதிராக கடந்த காலங்களில் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

பட்டலந்த வதைமுகாம் விவகாரத்தில் அவருக்கு தொடர்பு இருப்பதாக ஆளும் கட்சியினரே குற்றம் சாட்டியிருந்தனர். அதற்காகவும் அவர் கைது செய்யப்பட வில்லை.

மத்திய வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் 15 ஆயிரம் கோடி ரூபா மோசடிக்காகவும் அவர் கைது செய்யப் பட்டிருக்கவில்லை. அவரை சிறைக்குக் கொண்டுசென்றது வெறும் 1.66 மில்லியன் ரூபா மோசடிதான்.

தனது தனிப்பட்ட பயணத்திற்காக அரசாங்கப் பணத்தை பயன்படுத்தினார் என்பதே குற்றச்சாட்டு.

2023ஆம் ஆண்டு ஜி77 மாநாட்டை முடித்துக்கொண்டு கியூபாவிலிருந்து திரும்பும் வழியில், லண்டனில் தனது மனைவி மைத்ரியின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கச் சென்று இருந்தார். அதுவே அவருக்கு சிக்கலைக் கொண்டு வந்திருக்கிறது.

அவரது கைதுக்கான இந்தக் காரணம் மிகமிக அற்பமானது என்பதை, அரசாங் கத்தின் முக்கிய அமைச்சரான பிமல் ரத்நாயக்கவே ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனாலும் இக்கைதினால் ஏற்பட்டிருக் கின்ற அரசியல் கொந்தளிப்பு தீவிரமானது. இது அரசியலில் திருப்பத்தை ஏற்படுத்தும் என பரவலான கருத்துகள் நிலவுகின்றன. ஏனென்றால் அரசாங்கத்துக்கு இது ஒரு சவாலை ஏற்படுத்தியிருக்கிறது.

இது அவர்கள் அவசியமின்றி அவசரப் பட்டு எடுத்த முடிவாகப் பார்க்கப்படுகிறது. இதனை நிரூபிப்பதில் எதிர்க்கட்சிகள் வெற்றி அடைகின்றன. அதனால்தான், ஆளும்கட்சி இக்கைது நடவடிக்கையை, நியாயப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. இத்தகைய நிலையில், அரசாங்கம் இந்தக் கைதை நியாயப்படுத்தி பிரசாரம் செய்கிறது.

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட தற்கான காரணம் அற்பமானதாக இருக்கலாம், அவர் 40 ஆண்டுகளுக்கு முன்னரே கைது செய்யப்பட்டிருக்க வேண்டியவர் என்று கூறியிருக்கிறார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.

1977 தேர்தலுக்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர், யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பு, 1983 இனக் கலவரம் என்பனவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர் என்றெல்லாம் அவர் கூறியிருக்கிறார்.

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# கனடியப் ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நோக்கத்தை உள்ளடக்கிய கடிதத்தில் (Letter of Intent) இரண்டு நாடுகள் சார்பிலும் அதன் தலைவர்கள் கையொப்பம் இட்டனர். அதன்பின்னர் நடைபெற்ற கனடியப் பிரதமரும் உக்ரைன் அதிபரும் சேர்ந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மார்க் காணி, "34 வருடங்களுக்கு முன்னர் ஒட்டாவா சுதந்திரம் (Freedom), நியாயம் (Fairness) மற்றும் ஜனநாயகம் (Democracy) என்ற பெயரில் உக்ரைனிய சுதந்திரத்தை அங்கீகரித்தது" என்றார். கனடியப் பிரதமரின் உக்ரைன் பயண முடிவில் ஒரு கூட்டு அறிக்கை வெளியிடப்



பட்டது. அதில் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் அழைப்பின் பேரில் கனயடிப் பிரதமர் மார்க் காணி உக்ரைனுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இரு நாடுகளுக்கும் இடையேயான வலுவான மற்றும் நீடித்த கூட்டாண்மையை மீண்டும் உறுதிப்படுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்டிற்கு மார்க் காணி மேற்கொண்ட முதலாவது உத்தியோக பூர்வ பயணம் இதுவாகும்.



உக்ரைன் பயணத்தை முடித்துக்கொண்டு கனடியப் பிரதமர் ஓகஸ்ற் 25ஆம் திகதி போலந்தின் (Poland) தலைநகர் வார்சோ (Warsaw)விற்குச் சென்றார். அங்கு அவர் போலந்தின் பிரதமர் டொனால்ட் ரஸ்க்கைச் (Donald Tusk) சந்தித்தார். இரு தலைவர்களும் பாதுகாப்பு, விமானப்



Canadian Prime Minister Mark Carney with Poland's Prime Minister Donald Tusk.

போக்குவரத்து, சைபர் பாதுகாப்பு (Cyber Security) போன்ற துறைகளில் மிகவும் நெருக்கமாகப் பணியாற்ற ஒப்புக்கொண்டதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். இரு நாடுகளும் ஆண்டுதோறும் மேற்கூறிய விடயங்களைப்பற்றிக் கலந்து ஆலோசிக்க இருதரப்புக் கூட்டங்களை நடத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டது. கனடியப் பிரதமர் போலந்துடனான கூட்டு முயற்சிகள் ஐரோப்பிய நாடுகளில் கனடியப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் என்று தெரிவித்தார். அத்துடன் அவர் கனடா வேகமாக வளர்ந்துவரும் ஐரோப்பிய பொருளாதாரத்துடன் வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் எரிசக்தி ஆகியவற்றில் தனது உறவுகளை ஆழப்படுத்துகிறது என்றார்.

இப்பயணத்தின்போது கனயடிப் பிரதமருடன் கனயடிப் பாதுகாப்பு அமைச்சர் டேவிட் மக்கின்டியும் (David McGuindy) சென்றார்.

போலந்து பிரதமரைச் சந்திக்க முன்னர் உக்ரேனிய படைவீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஒப்ரேசன் யுனிஃபையரின் ஒரு பகுதியாக போலந்தில் நிறுத்தப்பட்டுள்ள கனடிய ஆயுதப்படை உறுப்பினர்களின் அணிவகுப்பு மரியாதை கனடியப் பிரதமரிற்கு அளிக்கப்பட்டது. அவர்களிடையே உரையாற்றும்போது கனடியப் பிரதமர், "உக்ரைனின் எதிர்கால பாதுகாப்புக்கு நீங்கள் அவர்களுக்கு கொடுக்கும் பயிற்சி அவசியம்" என்றார்.

கடந்த பத்தாண்டுகளாக ஐரோப்பாவில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக போலந்து இருந்து வருகிறது. தற்போது ஐரோப்பாவில் அதிவேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரத்தை போலந்து கொண்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பின்னர் புவிசார் அரசியலிலும் (Geopolitical) போலந்து அரசியல் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.

போலந்தில் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் கனடியப் பிரதமர், "போலந்தின் பிரதமரிடம் இருந்தும் அவரது அரசாங்கத்திடமிருந்தும் நாங்கள் நிறையக் கற்றுக் கொண்டோம். நேட்டோவிற்கு எங்கள் முழுப்பலத்தையும் அர்ப்பணிப்பது பற்றி அவரிடமே கற்றோம். போலந்தின் உறுதிப்பாட்டை நாங்கள் அடைய எங்களுக்கு சில ஆண்டுகள் எடுக்கும். ஆனாலும், நாங்களும் அதே அளவு உறுதிப்பாட்டைச் செய்வோம். அது எங்களுக்கும் சாத்தியமாகும்" என்றார்.

போலந்து தற்போது தமது GDPயின் 5%ஐ பாதுகாப்பு செலவினங்களுக்கு முதலிடுகிறது.



கனடியப் பிரதமர் தனது போலந்துப் பயணத்தை முடித்துக்கொண்டு ஓகஸ்ற் 26ஆம் திகதி ஜேர்மனிக்குச் சென்றார். அங்கு ஜேர்மன் தலைவர் (Chancellor) பிரீட்ரிக் மெர்ஸ் (Friedrich Merz)ஐச் சந்தித்தார். பின்னர் அவர்கள் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் எங்கள் இருநாடுகளும் பாதுகாப்பு மற்றும் முக்கியமான கனிமங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவோம் என்றனர்.

"கனடா மற்றும் ஜேர்மனிக்கும் இடையே நிறையப் பொதுவான விடயங்கள் உள்ளன. எங்கள் இருதரப்பு ஒத்துழைப்பையும் நாங்கள் ஆழப்படுத்துகிறோம். மேலும், மிகுந்த நன்றியுணர்வு மற்றும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் இதைச் செய்கிறோம்" என்று ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஜேர்மன் தலைவர் பிரீட்ரிக் மெர்ஸ் கூறினார். கனடியப் பிரதமரின் ஜேர்மன் பிரயாணத்தின்போது அவருடன் பாதுகாப்பு அமைச்சர் டேவிட் மக்கிண்டி, தொழில் துறை அமைச்சர் மெலானி ஜோலி (Melanie Joly), மற்றும் எரிசக்தி அமைச்சர் ரிம் ஹட்சன் (Tim Hodgson) உட்பட வேறு சில அமைச்சர்களும் கலந்துக் கொண்டனர்.

வடக்கு ஜேர்மனியில் உள்ள கீல் (Kiel) நகரில் இருக்கும் Thyssenkrupp Marine Systems நிறுவனத்திற்குச் சென்ற



கனடியப் பிரதமரும் அமைச்சர்களும் அவர்களது பாதுகாப்பு உற்பத்திகளைப் பார்வையிட்டனர். அங்கு உரையாற்றிய கனடியப் பிரதமர், "கனடா தனது நீர் மூழ்கிக் கப்பல் படையைப் புதுப்பிக்க உள்ளது. இந்தத் திட்டத்திற்கான கொள் முதல் பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களில் இருந்து கனடா இறுதித் தெரிவுக்கு இரண்டு நிறுவனங்களைத் தெரிவு செய்துள்ளது. அதில் Thyssenkrupp ஒரு நிறுவனமாகும்" என்றார்.



Canadian Prime Minister Mark Carney with Latvian Prime Minister Evika Silina

ஜேர்மன் பயணத்தை முடித்துக்கொண்டு கனடியப் பிரதமர் லாட்வியா (Latvia) இற்குச் சென்றார். அங்கு ரிகாவில் (Riga) அவர் லாட்வியா பிரதமர் எவிகா சிலினாவைச் (Evika Silina) சந்தித்தார். கனடாவின் மிகப்பெரிய வெளிநாட்டுப் பணியான ஒப்பரேசன் மீள்உறுதி செய்தல் (Operation Reassurance)இனுடைய ஒரு பகுதியாக 2,200 கனடிய ஆயுதப் படைகள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கனடியப் பிரதமரும் லாட்வியா பிரதமரும் ஓகஸ்ற் 27ஆம் திகதி கனடிய ஆயுதப்படை இருக்கும் அடாசி (Adazi) இராணுவத் தளத்திற்குச் சென்றனர். அங்கு கனடியப் பிரதமர் கனடிய இராணுவம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு இங்கு இருக்கும் எனத் தெரிவித்தார். அடாசி இராணுவத்



Canadian Prime Minister Mark Carney in Latvia.

தளத்தில் உள்ள கனடிய ஆயுதப்படை வீரர்களுடன் கனடியப் பிரதமர் மதிய உணவு அருந்தினார். அங்கு அவர் ஐரோப்பாவிலும் உள்நாட்டிலும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதிலும் அமைதியைப் பாதுகாப்பதிலும் அவர்கள் ஆற்றும் சேவை மற்றும் அர்ப்பணிப்பிற்கு அவர்களுக்கு கனடாவின் நன்றியைத் தெரிவித்தார். இத்துடன் தனது நான்கு நாள் ஐரோப்பிய பயணத்தை நிறைவு செய்து கொண்டு கனடியப் பிரதமர் நாடு திரும்பினார்.



# தமிழரசுக் கட்சியின் போராட்டம்!

## – முகிலன் –

ஒகஸ்ற் 25, 2025ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த ஓர் ஊடக சந்திப்பில், எதிரும் புதிருமான தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், சமத்துவ கட்சியின் தலைவர் சந்திரகுமார் ஆகியோர் அந்த ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் ஒரே அணியாகச் செயற்பட வேண்டும் என தமிழ் மக்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்தாலும், அவர்கள் இவ்வாறான ஒரு மேடையில் சந்திப்புக்கு வருவது அரிதானது.

செம்மணி உள்ளிட்ட புதைகுழிகளுக்கு சர்வதேச விசாரணைகோரி, கடந்த 29ஆம் திகதி வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப் பட்ட கையெழுத்துப் போராட்டத்துக்கு, அழைப்பு விடுக்கும் நோக்கிலேயே இந்த ஊடகச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழ்க் கட்சிகளுக்கு மத்தியில் பிளவுகள் பிரச்சினைகளுக்கு எப்போதும் பஞ்சம் இல்லை. தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நின்றிருந்தால், பல சந்தர்ப்பங்களில், பல அரசியல் வெற்றிகளைப் பெற்றிருக்க முடியும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு, தமிழ் தேசிய கட்சிகள் இணைந்து செயற்படவில்லை. அப்பொழுது தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவை ஆதரித்தது, இன்னொரு பக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை புறக்கணித்தது. இதனால் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்ட பொது வேட்பாளரின்மூலம் தமிழ் மக்களின் பொதுக்கருத்தை வலுவாக வெளிப்படுத் தும் வாய்ப்பு இல்லாமல் போனது. அதன் விளைவு பொதுத் தேர்தலிலும் வெளிப்பட்டது.

பொதுத்தேர்தலில், தமிழ் தேசியக் கட்சி களுக்குப் பலத்த அடி விழுந்தது. குறிப்பாக தமிழரசுக் கட்சி வடக்கில் பின்னடைவை எதிர்கொண்டது.

உள்ளூராட்சித் தேர்தலில் பரந்துபட்ட ஒரு கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதற்கு அது தயாராக இருக்கவில்லை.

தனித்தனியாகப் போட்டியிட்டால் அதிக ஆசனங்களைக் கைப்பற்றலாம் என்ற நியாயத்தை முன்வைத்து அது தனித்து போட்டியிட்டது.

அதில் குறிப்பிடத்தக்க சபைகளில் வெற்றி பெற்றிருந்தாலும், தமிழரசுக் கட்சி எதிர் பார்த்தளவுக்குப் பெரிய வெற்றி கிடைக்க



வில்லை. என்பிபிக்கு எதிராகத் தோன்றிய அலை, தமிழரசுக்கு சாதகமாக மாறியது. அதனை வைத்துக்கொண்டு தாங்களே பெரிய கட்சி, தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற கட்சி என்று கூறுகிறது.

தமிழரசுக் கட்சியை நடத்துகின்ற சுமந்திரனுக்குப் பின்னால் செல்லுகின்ற நிலையிலேயே சிவிகே சிவஞானம் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் இருப்பதுதான் அந்தக் கட்சியின் நிலையாக இருக்கிறது.

சிறிதரன் எதிர்க்குரல் எழுப்பினாலும்கூட அவராலும் சுமந்திரனுடன் கட்சிக்குள் மோத முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால் அவர் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிப் போய்க் கொண்டிருக்கிறார்.

சுமந்திரனை கட்சியில் உள்ளவர்கள் பின்பற்றத் தொடங்கியதும் சிறிதரன் வேறு வழியின்றி அவருக்கு அடங்கிப் போகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சூழலில், சுமந்திரன் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அடிக்கடி கூறி வருகிறார்.

நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கான வாய்ப்பு இப்போது கிடைக்காது என்பது அவருக்குத் தெரிந்து விட்டது. இதனால் அடுத்த ஆண்டு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற மாகாணசபைத் தேர்தலினூடாக, வடக்கு மாகாணத்தின் முதல்வராகும் கனவில் இருக்கிறார்.

அவர் தனது அரசியல் எதிர்காலத்தையும் கட்சிக்குள் தனது இருப்பையும் வலுப் படுத்திக்கொள்வதற்கும் மக்களுடன் தான் இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார்.

அண்மையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், மற்றும் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புகளால் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. வரும் ஜெனிவா கூட்டத் தொடரில் ஆணையாளரின் அறிக்கை மையப்படுத்த வேண்டிய விடயங்கள் மற்றும், நிறைவேற்றப்படும் பிரேரணையில் வலியுறுத்தப்படவேண்டிய விடயங்களை உள்ளடக்கியதாக தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைக் கொண்ட கடிதம் அது.

அதில் தமிழரசுக் கட்சி ஒப்பமிடவில்லை. அந்தக் கடிதம், தயாரிப்பதற்காக அழைக் கப்பட்ட கூட்டத்திலும் பங்கேற்கவில்லை. கடிதத்தைத் தயாரித்துவிட்டு அதன் வரைவை தமிழரசுக் கட்சிக்கு அனுப்பி திருத்தங்கள் இருந்தால் முன்மொழியுமாறு கேட்டிருந்தார் கஜேந்திரகுமார். ஆனால் அதற்கும் சுமந்திரன் மறுத்து விட்டார். அவர் தன்னை முன்னிறுத்தியே இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

அந்தக் கடிதம் அனுப்பப்பட்டதும், அதனை தமிழரசுக் கட்சி அலட்சியம் செய்தது. சுமந்திரனுக்கு நெருக்கமான ஒரு மின்னிதழ் ஆசிரியர் அதனைக் கிண்டலும் செய்திருந்தார். ஆனால் அக் கடிதத்துக்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம் இருந்து உடனடியா கவே பதில் கிடைத்தது. அதனைக் கவனத்தில் கொள்வதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில்தான், தனது செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கடந்த 15ஆம் திகதி ஒரு முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.

முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்ட இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்குமாறு கோரி, அந்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

மடு மாதா திருவிழாவிற்காக பின்னர் அந்த போராட்டம் 18ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. அந்தப் போராட்டத்தை அறிவித்த சுமந்திரன் அது குறித்து தனது கட்சிக்குள்ளேயோ அல்லது ஏனைய கட்சி களுடனோ, அல்லது வணிகர் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடனோ கலந்துரையாடவில்லை. ஒரு போராட்டத் திற்கு அழைப்பு விடுப்பது மாத்திரம் முக்கியம் இல்லை. அது வெற்றிகரமானதாக நடத்தி முடிப்பதுதான் முக்கியமானது.

இராணுவப் பிரசன்னத்திற்கு எதிரான ஒரு பரந்துபட்ட நோக்கிலான போராட்டத்தில் தமிழ் மக்களின் பெருவாரியான பங்களிப்பை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் சுமந்திரன் அவ்வாறு செய்யவில்லை. அவர் கடைசி நேரத்தில் வணிக கழகங்களை அணுகி ஆதரவு கேட்டபோதும், அவர்கள் அதற்கு இணங்கவில்லை.

ஒற்றுமையாக வாருங்கள் ஆதரவு தருகிறோம் என்று முகத்தில் அடித்தால் போல் வர்த்தகர் சங்கங்கள் பல கூறிவிட்டன. இதனால் அரைநாள் போராட்டமாக மாற்றப்பட்டது.

எனினும், வடக்கில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் முழு அடைப்பு போராட்டம் தோல்வியிலேயே முடிந்தது.

கிழக்கில் சில இடங்களில் மாத்திரம் வெற்றிகரமானதாக இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் முழு அடைப்பு வெற்றி பெறவில்லை என்பதை சுமந்திரனே ஒப்புக் கொண்டார். இப்போராட்டத்தை தோற்கடிப் பதற்கு அரசாங்கம் தனது அமைச்சர் களைப் பயன்படுத்தியது. ஏனென்றால் இது இராணுவத்தின் இருப்புக்கு எதிரான போராட்டம்.

முத்தையன்கட்டு சம்பவத்துடன் தொடர்பு உடையவர்கள் என, நான்கு இராணுவத் தினரை கைது செய்து விட்டதாகவும் அதனால் போராட்டம் அவசியம் இல்லை என்றும் அமைச்சர்கள் நியாயப்படுத்தினர்.

சுமந்திரனை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க போராட்டம் ஏன் என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

சுமந்திரனின் போராட்டம் தோல்வி என்று அரசாங்கம் அறிவித்தது. அந்த அறிவிப்பின் ஊடாக தமிழ் மக்கள் இராணுவத்தின் இருப்பை எதிர்க்கவில்லை என்ற செய்தியும் கூறப்பட்டது. இதற்கு சுமந்திரனும், தமிழரசுக் கட்சியுமே காரணம். அவர்கள், பெறுமதியான நோக்கத்தை சரியான முறையில் நிறை வேற்றி இருக்க வேண்டும்.

அதனைச் செய்யாமல் அரைகுறையாக அதனை முன்னெடுக்கப்போய் அனுர அரசிற்கு ஆதரவு அளித்துவிட்டனர்.

இவ்வாறான ஒரு போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு உரிய பலம் இல்லாவிட்டால் அவ்வாறான போராட்டத் தில் இறங்காமலே இருந்திருக்க வேண்டும். ஆனால் தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் தங்களைத் தாங்களே பலவீனப்படுத்திக் கொண்டது மட்டும் இல்லாமல், தமிழ் மக்களின் இலக்கையும் பலவீனப்படுத்தி இருக்கின்றனர்.

இராணுவ வெளியேற்றத்துக்கான ஒரு போராட்டத்தில், அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் தமிழரை நிற்க வைத்து மோத விட்டது தவறு. இவ்வாறான ஒரு நிலைக்குத் தமிழரைக் கொண்டுவந்து நிறுத்தியதுதான் அதன் விளைவு.

இந்த போராட்டத்தில் ஏற்பட்ட தோல்விக்கு பின்னர்தான், கையெழுத்துப் போராட்டம் தொடர்பான ஊடக சந்திப்புக்கு அழைத்த வுடன் தமிழரசுக்கட்சி பங்குபற்றியிருந்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையிலான அரசியல் வேறுபாடுகளை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன? – பகுதி 10

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904
e-mail: ushaconsult@gmail.com

## Life Coaching

நல்வாழ்வு பயிற்சி: ஒரு முழுமையான பயணம் (Final Part of the Life Coaching Series)

**“நான் யார்?” - இக்கேள்வியின் பயணம்**

நல்வாழ்வு பயிற்சி / Life Coaching என்பது ஒரு தீர்வுக்கான பயணம் அல்ல. இது ஓர் உணர்வுள்ள பரிசோதனை – நம் வாழ்க்கை பாணி, நம் கனவுகள், நம் பந்தங்கள் மற்றும் நம் பயங்களை, நம்மை நாமே உள்நோக்கிப் பார்க்கவும், மாற்றவும் வழிகாட்டும் ஒரு பயணம்.

இதில் தனிநபர் வளர்ச்சி, மனநிலை, நோக்கீடு, உறவுகள், தொழில், மனவியல் விழிப்புணர்வு, மற்றும் தத்துவ அடிப்படையிலான தேடல்களெல்லாம் சேர்ந்துள்ளன.

மூன்று கதைகளுடன் இவற்றை விளக்க விரும்புகிறேன்.

**கதை 1:‘சுற்றுப் பாதையில் ஓடும் குதிரை’ - A Story of Career & Identity**

**பிரச்சினை:** அவினாஷ், 37 வயது, பல ஆண்டுகளாக IT துறையில் வேலை பார்த்தார். நல்ல சம்பளம், செல்வாக்கு இருந்தும், உள்ளே ஓர் அழுத்தம், “இது என் வாழ்க்கையா?” என்ற ஏக்கமும் இருந்தது.

**நல்வாழ்வு பயிற்சியாளரின் அணுகுமுறை:** பயிற்சியாளர் வாழ்க்கைச் சக்கரப் பயிற்சி (Wheel of Life)மூலம் அவன் வாழ்க்கையின் எல்லா பரிமாணங்களிலும் (தொழில், ஆரோக்கியம், தனி மனித உறவுகள், ஆன்மீகம்) சமநிலை உள்ளதா என்பதைப் பார்ப்பதற்குத் தூண்டினார்.

**அவினாஷ் உணர்ந்தது:** “நான் ஒரு வேலை செய்கிறேன். ஆனால் அதுவே எனது வாழ்வின் முதன்மையான செயல் அல்ல. அவ்வேலை என்னை உருவாக்க வில்லை. அது என் வாழ்வில் ஒரு பகுதி மட்டுமே”

அவன் பள்ளிக்கால கனவு – ‘எழுத்தாளர்’ ஆக வேண்டும் என்பது. ஆனால் வாழ்க்கைப் பயணத்தின் ஓட்டத்தில் அக்கனவு முழுமையாகப் புதைக்கப்பட்டு விட்டது. நல்வாழ்வு பயிற்சிக்குப் பிறகு அவன் அதை உணர்ந்தான்.

**முடிவு:** இணையத்தில் அவனது தனிப்பட்ட பக்கத்திலிருந்து ஓர் இணையவழிக் கதைகள் தளம் தொடங்கினார்.

இன்று அவன் இரண்டு வேலைகளையும் சமநிலையுடன் செய்கிறான். அவனது சுயநிலை மீண்டும் உயிர்த்தெழுந்தது.

**கதை 2: ‘உள்ளம் தாங்கும் பிணைப்பு’ _ A Story of Relationship Healing**

**பிரச்சினை:** விஜயலட்சுமி, 45 வயது, தனது மகளுடன் தொடர்ந்து வாக்குவாதம் செய்து கொண்டே இருக்கிறார். அவர்களுக்கு இடையில் எந்த நேரமும் ஏதோ ஒரு பிரச்சினை இருந்துகொண்டே இருக்கிறது. அவர் சொல்கிறார் “நான் என் பிள்ளையோடு இப்படிப் பேச விரும்ப வில்லை. ஆனால் எதுவோ என்னை தாண்டுகிறது”

**நல்வாழ்வு பயிற்சியாளரின் அணுகுமுறை:** பயிற்சியாளர், நம்முள் இருக்கும் குழந்தையைக் குணப்படுத்துதல் ( Inner Child Healing) பயிற்சிமூலம் ஒரு முக்கியமான காரணத்தைக் கண்டார்.

விஜயலட்சுமி தன் தாயுடன் கொண்டிருந்த அதீத கட்டுப்பாடுடைய வளர்ப்பு முறையும், முரண்பாடுகள் நிறைந்த மற்ற உறவுகளும், இன்று தன் மகளுடனான உறவை தொடர்ந்து பாதித்துக் கொண்டே இருக்கிறது. தன் தாயுடன் வாழ்ந்த வாழ்க்கையை மகளுடன் தொடர்கிறார். காரணம் அவருக்கு உணர்த்தப்பட்டபோது அவரால் அதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அவளுக்கு “இனி என்ன செய்யலாம்?” என்பதற்கான வினாக்கள் உதவியாயின.

**முடிவு:** தன் மகளுடன் தினசரி 10 நிமிடங்கள் மனம் திறந்து பேசும் உரையாடலை வளர்க்க ஆரம்பித்தார். ஒரே வாரத்தில் பத்து நிமிடங்கள் ஒரு மணி நேரமாக மாறி தாயும் மகளும் பிறகு மணிக் கணக்கில் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். உறவில் பாசம், பகிர்தல், பரிவு, மற்றும் உறுதி மென்மேலும் வளர்ந்தது.

**கதை 3: “எங்கே செல்கிறேன்?” - A Story of Vision & Purpose**

**பிரச்சினை:** அனுராதா, 50 வயது, குழந்தைகள் பெரிதாகி விட்டனர். வேலை ஓய்வுக்கு வருகிறது.

“இப்போது என்ன செய்வது?” என்ற குளறுபட்ட மனநிலை. ஒருவிதமான வெறுமை.

**நல்வாழ்வு பயிற்சியாளரின் அணுகுமுறை:** பயிற்சியாளர், எதிர்கால சுய காட்சிப் படுத்தல் Future Self Visualization பயிற்சிமூலம் அவளை 5 வருடங்களுக்குப் பிறகு உள்ள தன்னுடைய வாழ்க்கையை கண்முன் காண வைத்தார்.

அவள் தன் வாழ்வில் புதிய பக்கத்தை எழுத ஆசைப்பட்டதை உணர்ந்தாள் - கலை (படம் வரைதல்)மீது ஆழ்ந்த ஈர்ப்பு இருந்தது.

**முடிவு:** அவள் முதலில் ஒரு சிறிய online art class தொடங்கினாள். பின்னர், art therapyஇல் certificate எடுத்தார்.

இப்போது, senior citizensஇற்கு உணர்வியல் மேம்பாட்டிற்கான ஓவியப் பயிற்சி நடத்துகிறார்.

**முடிவுரை: நல்வாழ்வு பயிற்சி என்பது முடிவல்ல ஆரம்பம்!**

நல்வாழ்வு பயிற்சி என்பது:

* உங்கள் வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் ஒருங்கிணைக்கும் நுட்பமான தேடல்.
* உங்கள் உள்ளே மறைந்திருக்கும் திறமைகளை கனவுகளை லட்சியங்களை மீட்டெடுக்கும் பயணம்.
* உங்களின் அறியப்படாத சாத்தியங்களை வெளிக்கொணரும் பயணம்.

“The coach is not the light. The coach helps you see that you are already the light.”

“பயிற்சியாளர் ஒளி அல்ல. நீங்கள் ஏற்கனவே ஒளியாக இருப்பதைப் பார்க்க பயிற்சியாளர் உங்களுக்கு உதவுகிறார்.”

**நல்வாழ்வு பயிற்சி தொகுப்பாக இதுவரை நாம் அறிந்தவை:** முடிவில்: உங்கள் பயணத்தைத் தொடங்கத் தயாரா?

| பரிமாணம் | எடுத்துக்காட்டுகள் / கதைகள் |
|---|---|
| தன்னம்பிக்கை | “கண்ணாடி என் எதிரி” - inner critic வேலை செய்யும் முறை |
| உறவுகள் | “உள்ளம் தாங்கும் பிணைப்பு” – inner child & repair |
| தொழில் & நோக்கம் | ‘சுற்றுப்பாதை’ & ‘நான் எங்கு செல்கிறேன்?’ |
| மனவியல் | Amygdala Hijack, Core Beliefs,Limiting thoughts |
| தத்துவம் | Socratic inquiry, Zen stories, Stoicism, Bhagavad Gita insights |
| திறன்கள் & திட்டமிடல் | Goal setting, journaling, visualization, habit forming |

நீங்கள் ஒருவருக்குப் பயிற்சியாளர் (Coach) ஆகவோ அல்லது பயிற்சி பெற விரும்புகிறவராகவோ (Coaching) இருக்கலாம் – அப்படி விருப்பம் இருக்க இருக்கும் பட்சத்தில் கீழ்கண்ட தொடர்புகளைப் பயன்படுத்தி இக்கட்டுரையாளரை தொடர்புகொள்ள உங்களை வரவேற்கிறேன்.

இத்தொடரின் ஒவ்வொரு பகுதியும் உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருக்கும் புதையல்களை நீங்கள் அறிந்து கொள்ள தேவையான கதவுகளை திறக்க உதவுகிறது. தயாரா நண்பர்களே!

# வாக்குறுதிகளை...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

மத்திய வங்கி ஊழல் விவகாரத்திலும் அவர் கைது செய்யப்பட வேண்டியவர் தான் என்றும் கூறுகிறார்.

ஆனால் இப்பாரிய குற்றச்சாட்டுகளையெல்லாம் விட்டுவிட்டு, அற்ப காரணத்துக்காக ரணிலை சிறைக்குள் தள்ளிய அரசாங்கத்தின் உண்மை நோக்கம், அரசியல் பழிவாங்கல்தான்.

நீதியை நிலைநாட்டுவதில் அக்கறையுள்ள உண்மையான அரசாங்கமாக இருந்தால், பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட அந்த முக்கியமான சம்பவங்களுக்காக, ரணில் விக்கிரமசிங்கவை கைதுசெய்து, சட்டத்தின்முன் நிறுத்தியிருக்க வேண்டும். அதனை அனுர அரசால் செய்யமுடியாத நிலையில்தான், இந்தச் சிறிய காரணங்களை வைத்து அவரை உள்ளே தள்ளியது.



அவரைக் கைது செய்ததன்மூலம், உச்ச அதிகாரத்தில் இருந்தவர்கள் என்றாலும் கூட, சட்டத்தின்பிடியில் இருந்து தப்ப முடியாது என்ற செய்தியை என்பிபி அரசாங்கம் கூறியிருக்கிறது, இது வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஆனால் இதனை அரசாங்கம் அரசியல் காழ்ப்புடன் முன்னெடுப்பதுதான், மாறுபட்ட கருத்துகளை ஏற்படுத்தியிருக்கிறது.

எதிர்க்கட்சிகளையெல்லாம் ஒரே அணியாக ஒன்று திரள வைத்திருக்கிறது.

கடந்த 26ஆம் திகதி ரணிலுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர் மருத்துவமனையில் இருந்து மெய்நிகர் முறையில் பங்கெடுத்தார். அவரை நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்ல மருத்துவர் குழு அனுமதிக்கவில்லை.

அவசரமாக இதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் இல்லையேல் உயிராபத்துக்கூட ஏற்படலாம் என மருத்துவர்கள் கூறியிருக்கின்றனர்.

இதனால், வழக்கு முடியும்வரை ரணிலை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்ற அரசதரப்பு சட்டத்தரணி திலீப பீரிசின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாமல் நீதிவான், பிணை வழங்கி உத்தரவிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சட்டத்தின் பிடியில் சிக்கியுள்ள ரணிலுக்கு இப்போது, நோயின்பிடி ஒரு பக்கம், மனைவிக்கு ஏற்பட்டிருக்கும் புற்றுநோய் மறுபக்கமாக அடுத்தடுத்து சோதனைகள் துரத்தத் தொடங்கியிருக்கின்றன.

# நாமும் நமது இல்லமும் 684

## அடுக்குமனையில் ஏற்படும் ஏற்றம் இறக்கம்



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

2024ஆம் ஆண்டில் மட்டும் 20 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட 10,000இற்கும் மேற்பட்ட கனடிய மக்கள் கனடாவின் ஏனைய மாகாணங்களிற்கு இடம்பெயர்ந்துள்ளனர். இத்துடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் (Donald Trump)இன் வரிக் கொள்கையால் (Tariff) கனடிய உலோகப் பொருட்களின் விலையிலும் (குறிப்பாக Steel and Aluminium) அதிக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டின் இளவேனிற் காலத்தில் (Spring) புதிய வீடு மற்றும் மனைகளில் விற்கப்படாமல் இருப்பவற்றின் எண்ணிக்கை 23,000 ஆகும்.

இன்றைய நிலைமை தொடருமட்டில், இவற்றை விற்று முடிக்க ஏறக்குறைய ஐந்து (5) வருடங்கள் தேவைப்படலாம்.

இவற்றில் 2,000 மனைகள் கட்டப்பட்டு, உரிமம் (Deed) பெற்று ஒருவராலும் பாவிக்கப்படாமல் (Empty) இருக்கின்றன. அதாவது காலியாக (Vacant) உள்ளது.

மேலும் 2024ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் GTA மற்றும் ஹமில்ரன் (Hamilton) பகுதியில் 81%ஆன முதலீட்டாளர்களின் அடுக்கு மனைகள் வாடகைக்கு கொடுத்த போதிலும் மாதாந்த வரவுசெலவில் $605 பற்றாக்குறை ஏற்படுவதாக 'Urbanation' தெரிவிக்கின்றது.

அரசின் செயல்திறனற்ற கொள்கையினாலேயே இவ்வாறான நிலைமை ஏற்பட்டதாக சில பொருளாதார ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உதாரணமாக, 2011ஆம் ஆண்டிற்கும், 2021ஆம் ஆண்டிற்கும் இடையில் கட்டப்பட்டதில் 89%ஆனவை அடுக்குமாடி குடியிருப்புகளாகும். இவை முதலீட்டாளர்களை நம்பி கட்டப்பட்டது.

அடுக்கு மனைகளே கனடிய நகரங்களை மேம்படுத்தியது என்பதனையும் நாம் மறக்க முடியாது.

முதலாவது கொண்டோ கட்டிட நிலத்திலான தொடர் வீடு (Condo. Building - Town House Complex) 1967ஆம் ஆண்டு எட்மென்ரனில் (Edmonton - Alberta) கட்டப்பட்டது. இதே ஆண்டு ஒன்ராறியோவில் Condominium Act உருவாக்கப்பட்டது. அதாவது, அடுக்குமாடிக் கட்டிடத்தில் உள்ள மனைகளை தனித்தனியான அலகுகளாக விற்கக்கூடிய முறையில் உருவாக்கப்பட்டது.

1975ஆம் ஆண்டில் ஒன்ராறியோ அரசு வாடகை அதிகரிப்புக்கு எதிரான (Rent Control) சட்டம் கொண்டுவந்தது. இதனால் அடுக்குமனைகள் (Condo. Units) மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்றது. வீடுகளின் விலை அதிகரிப்பால் சிறிய குடும்பம், வயதானவர்கள், தனிப்பட்டவர்கள் அடுக்கு மனையை நோக்கித் திரும்பினர்.



இந்நிலைமை ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் மக்களால் பெரிதும் விரும்பத்தக்கதாக மாறியது. ஆடம்பர அடுக்கு மனைகளும் (Luxury Condo. Units) உருவாக்கப்பட்டன. வெளிநாட்டவர்களும் வசதி படைத்தவர்களும் இதில் முதலிடத் தொடங்கினர்.

1990ஆம் ஆண்டிற்கு முன்பாக கட்டப்பட்ட அடுக்குமனைகளின் இடைநிலை (Median) அளவு 1000 சதுர அடியாகக் காணப்பட்டது. மனைகளின் (அளவில்) கூடிய அளவில் இருந்து குறைந்த அளவிற்கு ஒழுங்குபடுத்தும்போது நடுவில் வருவது மீடியன் (Median) ஆகும்.

காலப்போக்கில் மனைகளின் அளவு (Size) குறைந்து வரத் தொடங்கியது.

2000ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நிர்மாண உரிமையாளர்கள் பலவிதமான முதலீட்டாளர்களை (Investors) மனதில் வைத்து புதிய உத்திகளைக் கொண்டு வந்தனர்.

நகராட்சி, பிரதேச சபைகளும் உயர் கட்டிடத் தொகுதிகள் நிர்மாணிக்க அனுமதி கொடுக்கத் தொடங்கின.

2019ஆம் ஆண்டில் 38%ஆன மனைகள் முதலீட்டாளர்களாலேயே கொள்வனவு செய்யப்பட்டன. வன்கூவரில் இம்மனையின் பெறுமதி 46%ஆகக் காணப்பட்டது.

அதிக முதலீட்டாளர்கள் ஆதனச் சந்தைக்கு வரத் தொடங்கினர். இந்த முதலீட்டாளர்கள் மாணவர்களை, புதிய வருகையாளர்களை, வயது குறைந்தவர்களை, குறுகிய காலத்திற்கு கனடாவிற்கு வந்து போனவர்களை (Visitors / Short Term Workers) நோக்கமாகவே வைத்து இரண்டாவது, மூன்றாவது மனைகள் என முதலிடத் தொடங்கினர்.

இவ்வாறான நிலைப்பாட்டால் பல ஆதன முகவர்கள் புதிதாக நிர்மாணம் செய்ய விருக்கும் மனைகளை விற்பதில் மட்டுமே கவனம் செலுத்தினர். அத்துடன் முகவர்களும் அதிகளவில் முதலிட்டனர். இதற்கு Social Mediaவும் உதவின. இதனால் பலர் முதலிட ஆரம்பித்தனர். அடுக்கு மனையில் விலை அதிகரிப்பும் ஏற்படத் தொடங்கியது.

உதாரணமாக 2005ஆம் ஆண்டில் GTA இல் அடுக்குமனையின் சராசரி விலை $200,000. 2015ஆம் ஆண்டில் இதன் விலை $300,000ஆகக் காணப்பட்டது. இதன் அதிகரிப்பு $100,000 ஆகும்.

இந்தப் பெறுமதி 2020ஆம் ஆண்டில் $600,000ஆக உச்சம் பெற்றது. ஏறக்குறைய 15 வருடங்களில் மூன்று மடங்காகியது.

2008ஆம் ஆண்டில் மனையின் விலையில் சிறிய இறக்கம் ஏற்பட்டது. எனினும் 2010 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் அதிகரிப்பு ஏற்படத் தொடங்கியது.

தொடர்ச்சியாக விலை ஏறியது. மனைகளின் சராசரி அளவு குறைந்தது. 2020 ஆம் ஆண்டில் கொரோனா பெருந் தொற்றால் சிறிதுகாலம் ஏற்றம் தடைப்பட்டது. இதனைத் தவிர்க்க கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை 0.25%இற்கு குறைத்தது.

2021ஆம் ஆண்டில் மக்கள் மீண்டும் அடுக்குமனை மற்றும் வீடுகளை நோக்கித் திரும்பினர். மீண்டும் முதலிடத் தொடங்கினர்.

2022ஆம் ஆண்டில் முதல் கால்பகுதியில் சராசரி அடுக்குமனை விலை $808,000 ஆக உச்சம் பெற்றது. குறுகிய காலத்தில் பணம் உழைப்பதற்கு ஆதனத்தில் முதலிடுவதே சிறந்த முறை என்ற மனநிலைக்கு பலர் தள்ளப்பட்டனர். ரொறொன்ரோவில் ஒருவர் 323 சதுர அடியை $580,000இற்கு வாங்கினார் (ஒரு சதுரஅடி விலை $1795). மார்ச் 2022 இலிருந்து வட்டிவீதம் ஏறத் தொடங்கியது. தொடர்ந்து 18 மாதங்களில் ஒன்பது (9) தடவை வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டது.

வட்டிவீத அதிகரிப்பால், அடமானக்கடன் இந்த அடுக்குமனைக்கு எடுக்கும்போது இதன் விலை $360,000ஆக கணக்கிடப் பட்டது (Appraised Value). இதன் விலை $220,000இனால் குறைந்தது.

அத்துடன் 400 சதுர அடிக்கு குறைவான மனைகளிற்கு பல நிதி நிறுவனங்கள் கடன் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. வாங்கியவர்களிற்கு சுமை ஏறியது.

இவ்வாறான 1000இற்கு மேற்பட்ட வாங்கியவர்களின் நிலைமைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் அடுக்குமனை ஆதனம் வாங்குவதனை மக்கள் தவிர்த்தனர். இந்நிலைகளால் 2024ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 28 கட்டிடத்தொகுதிகள் (5700 மனைகள்) முற்றாக நிறுத்தப்பட்டு விட்டன. நிர்மாணம் செய்யும் நிறுவனங்களும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டன.

2022ஆம் ஆண்டின் இளவேனிற்காலத்தில் மொன்றியலைச் சேர்ந்த 41வயது நபர் ரொறொன்ரோவில் 10% ஆரம்ப முதலீட்டுடன் 468 சதுர அடியான புதிதாகக் கட்டப்படும் அடுக்குமனை ஒன்றை $855,000இற்கு Toronto Forest Hill பகுதியில் வாங்கியிருந்தார். இந்த மனை 2024இல் கட்டப்பட்டு கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

கட்டி முடிப்பதற்கும் முன்பாக இந்த மனையை கைமாற்றக்கூடியதாக இருக்கும் என்ற நோக்கிலேயே இவர் வாங்கியிருந்தார் (Assignment Sale) கைமாற்றுவதற்கு தகுந்த வாங்குபவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் விற்க முடியவில்லை அல்லது கைமாற்ற முடியவில்லை.

இவர் வாங்கிய காலத்திலிருந்து அடுக்குமனை விலை இறங்கத் தொடங்கியது. 2024ஆம் ஆண்டின் முதல் கால்பகுதியில், அடுக்கு மாடி மனையின் சராசரி விலையும் குறைந்து வந்தது. இந்த குறிப்பிட்ட மனையின் பெறுமதி $696,000ஆக வந்தது. இவருக்கு அடமானக் கடன் பெறுவதில் ஏற்பட்ட சிரமத்தால் வாங்கிய மனையை உரித்துக் கொள்ள முடியாமல் போயிற்று. (Deal was not Completed).

நிர்மாண உரிமையாளர் (Builder) இதனால் வேறு ஒரு வாங்குநர்க்கு $420,000இற்கு விற்க வேண்டியதாயிற்று.

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLDFINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to school, TTC & other facilities. Avail. immediately.
**416.825.0566/647.502.8680**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & EGLINTON**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to school, 24 hrs. bus, Go Station. Small family /Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.737.0049**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
***New*** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 2 parking, Large 2 windows, kitchen, laundry, brand new appliances & Internet. 5 mins to School. No smoking & no pets. Family preferred. Rent negotiable. Available immediately.
தொடர்புகளுக்கு: **647.534.1420/647.471.3812**

## BASEMENT FOR RENT
**WHITES & FINCH - PICKERING**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to bus stop & all facilities. No smoking & no pets. If Seniors rent the basement, we can provide Meals. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.980.3114**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
2 Bedrooms for rent in an apartment. Including utility. Sharing washroom & kitchen. Close to all facilities. In front of Woodside mall. Rent $900 each room. Working people preferred. Avail. Sept. 01, 2025.
தொடர்புகளுக்கு: **437.424.0702**

## ROOM FOR RENT
**HARMONY & TAUNTON**
**OSHAWA -** 3 Rooms with sep. washrooms for rent in a house. 2 people can share one room. Close to university, bus stop & all facilities. Avail. Sept. 20, 2025.
தொடர்புகளுக்கு: **647.328.1545**

## ROOM FOR RENT
**KINGSTON & LAWRENCE**
1 Bedroom for rent in a main floor. Parking. Close to bus stop & all facilities. Rent $700 Utility included. Avail immediately.
**416.458.4581/416.984.6737**

## HOUSE & BASEMENT FOR RENT
**MCCOWAN & ELLESMERE**
4 Bedrooms house main floor for rent. 1 Parking
**PHARMACY ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.640.5182**

## ROOM FOR RENT
**MARKHAM & BUR OAK**
1 Bedroom with attached washroom for rent in upstairs. Close to Mount joy go station & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.669.8711**

## ROOM FOR RENT
**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in a 2 Bedrooms brand new bsmt. Sep. entrance. Close to TTC & all facilities. Avail. immediately.
**416.333.5495/416.569.0657**

## ROOM FOR RENT
**LAWRENCE & BELLARMY**
1 Private room or sharing room for rent in a main floor. Close to bus stop & all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.949.6204**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
3 Bedrooms house & 1 Bedroom bsmt full house for rent. 2 Bedrooms bsmt also available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.9935**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms for rent in a bsmt. Female/ Couple only. Sharing kitchen & washroom. Close to TTC, U of T & all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.688.8364**

## ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
1 Room for rent in upstairs. Attached washroom & 1 Parking. Female /couple preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.409.1696**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms for rent in upstairs. Female only. In front of bus stop. Close to all facilities.
Avail. September 01, 2025.
**647.231.2637/647.766.7089**

## HOUSE/BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLD FINCH**
3 +2 Bedrooms full house for rent. Also 1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to Bus stop, School & Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.780.2129**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms & 1 washroom basement for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## ROOM FOR RENT
**KENNEDY & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. Female only.
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Female only.
தொடர்புகளுக்கு: **647.247.9221**

## HOUSE /ROOM FOR RENT
**WARDEN & FINCH**
3 Bedrooms & 3 washrooms brand new house for rent & Rooms for rent in upstairs with attached washroom. Close to bus stop. Ladies Preferred. Avail. immediately.
**416.889.3191 /647.667.0482**

## APARTMENT FOR RENT
**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedrooms apartment for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
**416.818.3327/416.818.1542**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Large room for rent in an apt. with furniture. Parking available. internet. No smoking & no pets. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.6884**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & STAINES**
1 Rooms for rent in upstairs. Male only. Parking. Close to TTC & all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.237.2030**

## HOUSE & BASEMENT FOR RENT
**SHEPPARD & MEADOWVALE**
2 Bedrooms house & 2 Bedrooms bsmt for rent. Parking, Close to 24 hrs. bus service, University & all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.609.4518**

## HOUSE & BASEMENT FOR RENT
**MCCOWAN & BRIMORTON**
3 Bedrooms & 2 washrooms bangalaw house main floor and 2 Bedrooms bsmt with sep. entrance for rent. Close to TTC & all the facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.326.8456**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms fully furnished bsmt for rent. Sep. entrance & Sep. laundry. Close to TTC, School & shopping plaza .
Avail. September 01, 2025.
**416.704.3975/416.291.1952**

## BASEMENT/ROOM FOR RENT
**MARKHAM & SHEPPARD/DENISON**
Single room with sep. washroom for rent. Rent $500. Large bedroom sharing for male. Rent $700
**DON MILLS & STEELES**
2 Bedrooms bsmt for rent $1600 + Utility. No alcohol, no pets & no smoking. Avail.immediately.
**647.507.2148/647.864.1051**

## HOUSE & BASEMENT FOR RENT
1. **MORNINGSIDE & MCLEVIN -** 4 Bedrooms & 2 washrooms house.
2. **SCARBOROUGH -** 3 Bedrooms & 2 washrooms house & 2 Bedrooms bsmt
2. **MARKHAM & STEELES -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.
3. **PICKERING (WHITES & TAUNTON) -** 4 Bedrooms & 3 washrooms house & 1 Bedroom bsmt for rent.
4. **AJAX -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.

தொடர்புகளுக்கு: **647.850.7831**

## BASEMENT/ROOM FOR RENT
**9TH LINE & HOOVER PARK -** 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking.
**MARKHAM & STEELES -**1 Bedroom bsmt for rent. Sep. entrance.
**CONLINS & SHEPPARD -** Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.3355**

## HOUSE/ROOM FOR RENT
**MARKHAM & STEELES -** 4 Bedrooms house for rent. 2 Parking. 2 Minute to TTC & all facilities.
**MORNINGSIDE & OLD FINCH -** Rooms for rent in Main floor & bsmt. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.627.6194**

## HOUSE FOR RENT
**BRIMLEY & BRIMORTON**
3 Bedrooms & 1 washroom main floor for rent. 2 parking. Close to STC & school. 2 Minutes walk from bus stop. Family preferred. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.919.8441**

## HOUSE FOR RENT
**BRIMLEY & LAWRENCE**
3 Bedrooms & 1 washroom main floor for rent. 2 parking & sep. laundry. Behind SP Importers. Close to Bus stop. Working family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.706.7973**

## MATH TUTORING
**FINCH & MORNINGSIDE**
By a well - qualified and experienced lady teacher for all grades from Grade 3 to 12
**Contact by text message**
**416.525.6662**

## CAR FOR SALE
2024 Limited Hybrid TOYOTA RAV4 for sale.
தொடர்புகளுக்கு: **416.662.9935**

## HOUSE FOR RENT
**MIDDLEFIELD & MCNICOLL**
3 Bedrooms with 1 parking house for rent. Short term/ Long term rental available. Avail. November 01, 2025.
**647.774.6599/416.420.1309**

## HOUSE FOR RENT
**WARDEN & HWY 401**
3 Bedrooms & 1 washroom house for rent. 2 Parking. 1Min. walk to bus stop. Close to all facilities. Avail. October 01, 2025.
**416.414.0439/647.740.8181**

## வேலைக்கு ஆள் தேவை
**House Keeping, Cooking & Child Care**
**MARKHAM** பகுதியில் 06:30Am 09:30Amஇற்கு அல்லது 5.30Pm - 8.30Pm இற்கு இடையே வீட்டு பராமரிப்பு, குழந்தை பராமரிப்பு மற்றும் சமையல் வேலைகளைச் செய்வதற்கு பெண் தேவை.
தொடர்புகளுக்கு: **416.918.9848**

## முதியோர் காப்பகம்
**RETIREMENT HOME**
* பாதுகாப்பான தங்குமிட வசதி
* தினசரி பராமரிப்பு
* மருத்துவ சேவைகள்
* நிறைவான/ நிம்மதியான சூழல்

எங்களுடன் இணைந்திடுங்கள்
**647.824.0452/647.701.9809**

## HOUSE FOR RENT
**BRIMLEY & FINCH**
3 Bedrooms & 2 full washrooms house for rent. 2 Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.298.0134**

## HOUSE FOR RENT
**MCCOWAN & LAWRENCE**
3 Bedrooms house main floor for rent. Parking. Close to all facilities. Avail. September 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.309.9909**

## CONVENIENCE STORE FOR SALE
In a bustling plaza in Scarborough. Located near many apartment buildings, with over 30 years of in the business. Alcoholic beverages permitted store.
**Please call - 416.828.5019 for more details.**

## திருமண சேவை
கனடா மற்றும் இலங்கையில் வாழும் பொருத்தமான மணமக்கள் எம்மிடம் உண்டு.
தொடர்புகளுக்கு: **437.849.9619**

## HOUSE FOR RENT
**MARKHAM & ELLESMERE**
3 Bedrooms house & 1.5 washroom house for rent. 1 Parking. Close to TTC, Centennial College, UofT & all facilities. Avail. September 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.707.4350**

## CONDO. FOR RENT
**NEILSON & MCLEVIN**
480 Mclevin Ave. - 1 Bedroom & 1 washrooms condo. for rent. 1 parking included. Close to Malvern mall & all facilities. Avail. September 01, 2025.
**Pls. Contact: 416.560.0327**

## OFFICE SPACE FOR RENT
**MARKHAM & FINCH/ BRAMPTON**
Office rooms for rent. Suitable for professional offices & Meeting Space /Medical Clinic/ Educational Classes. Evening 5Pm-10Pm (Week days) & weekends class rooms for rent.
**416.918.9848/416.857.7603**

## CAR FOR SALE
2008 TOYOTA YARIS for sale. Automatic. 228,000 Kilo meters. Good condition & A/C
2006 TOYOTA PRIUS Hybrid. 284,000 Kilo meters.
தொடர்புகளுக்கு: **416.688.8364**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**NEILSON & FINCH**
3 Bedrooms & 2.5 washrooms house for rent. 3 Parking. Close to bus stop & all facilities. Avail. October 01, 2025.
**647.771.1187/647.574.2744**

## V MOVE & DELIVERY
உங்களின் சிறியளவிலான மற்றும் பெரிய அளவிலான உள்ளூர் மற்றும் வெளியூர் **Toronto - Montreal/ OTTAWA moving** தேவைகளுக்கு
அழையுங்கள்.
**416.277.4245**


## வயோதிபர் பராமரிப்பு
**MARKHAM** பகுதியில் உள்ள வீட்டில் முழுநேரமாகவோ பகுதிநேரமாகவோ வயோதிபர்கள் இருவரைப் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: **647.823.2075**

## HOUSE FOR RENT
**MORNINGVIEW & LITTLES ROAD**
4 Bedrooms house for rent. 2.5 Washrooms. Walking Distance to School, Park, TTC & Daycare. Family Preferred. No Pets. Avail. October 01, 2025.
**Contact: 647.824.9541**
**E.Mail suthan06@yahoo.com**

## WALK IN CLINIC
**DR.U.SOMASUNDARAM**
Family Physician
1200 Markham Road, Unit No.115
Scarborough, ON M1H 2Y9
**T: 416.439.8085**
**Open Hours - Monday - Friday**
**9:00Am - 7:00 Pm**

## மணமகள் தேவை
1984ஆம் ஆண்டு பிறந்த கனடியன் Citizen என்ஜினியர் மணமகனுக்கு கனடாவில் உள்ள பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: **416.836.9355**

## RECEPTIONIST & SALES PERSON
**MARKHAM & SHEPPARD** பகுதியில் உள்ள Ideal Stairs Showroom ஒன்றிற்கு Receptionist மற்றும் Sales personஆக தொழில்புரிவதற்கு ஒருவர் தேவை. (Weekend)
**Requirement -** Excellent Communication skills in English, Able to do Marketing & Office Maintenance.
தொடர்புகளுக்கு: **416.830.3932**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME
**COOK, KITCHEN HELPER & CASHIER**
**MARKHAM & STOFFVILLE**இல் அமைந்துள்ள இலங்கை தமிழ் உணவகம் ஒன்றிற்கு **Cook, kitchen helper & Cashier** போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை.
**Cashier** வேலைக்கு பெண்கள் விரும்பத்தக்கது.
**Please Call: 416.999.3878**

## JOB JOB JOB

**Hooksey's fish and chips**
**3050 garden st. Whitby**
**Hiring Kitchen helper for Monday - Friday mornings**
**With have some experience, we will trained.**
**We serve breakfast.**
தொடர்புகளுக்கு: **437.778.4482**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME / PART TIME

**CHEF, LINE COOK**
**QUEEN & LESLIE**இல் அமைந்துள்ள **THAI Restaurant** ஒன்றிற்கு **Chef, line Cook & Breakfast cook** போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.
**Call: 416.220.9179 Email: chadsenagroup@gmail.com**



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
**Tel: 416.754.7338 / 416.724.7480**
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# எது கெடும்

- தனலக்சுமி -

01) பாராத பயிரும் கெடும்.
02) பாசத்தினால் பிள்ளை கெடும்.
03) கேளாத கடனும் கெடும்.
04) கேட்கும்போது உறவு கெடும்.
05) தேடாத செல்வம் கெடும்.
06) தெகிட்டினால் விருந்து கெடும்.
07) ஓதாத கல்வி கெடும்.
08) ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
09) சேராத உறவும் கெடும்.
10) சிற்றின்பன் பெயரும் கெடும்.
11) நாடாத நட்பும் கெடும்.
12) நயமில்லா சொல்லும் கெடும்.
13) கண்டிக்காத பிள்ளை கெடும்.
14) கடன்பட்டால் வாழ்வு கெடும்.
15) பிரிவால் இன்பம் கெடும்.
16) பணத்தால் அமைதி கெடும்.
17) சினமிகுந்தால் அறமும் கெடும்.
18) சிந்திக்காத செயலும் கெடும்.
19) சோம்பினால் வளர்ச்சி கெடும்.
20) சுயமில்லா வேலை கெடும்.
21) மோகித்தால் முறைமை கெடும்.
22) முறையற்ற உறவும் கெடும்.
23) அச்சத்தால் வீரம் கெடும்.
24) அறியாமையால் முடிவு கெடும்.
25) உழுவாத நிலமும் கெடும்.
26) உழைக்காத உடலும் கெடும்.
27) இறைக்காத கிணறும் கெடும்.
28) இயற்கையழிக்கும் நாடும் கெடும்.
29) இல்லாள் இல்லா வம்சம் கெடும்.
30) இரக்கமில்லா மனிதம் கெடும்.
31) தோகையினால் துறவு கெடும்.
32) துணையில்லா வாழ்வு கெடும்.
33) ஓய்வில்லா முதுமை கெடும்.
34) ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்.
35) அளவில்லா ஆசை கெடும்.
36) அச்சப்படும் கோழை கெடும்.
37) இலக்கில்லா பயணம் கெடும்.
38) இச்சையினால் உள்ளம் கெடும்.
39) உண்மையில்லா காதல் கெடும்.
40) உணர்வில்லாத இனமும் கெடும்.
41) செல்வம்போனால் சிறப்பு கெடும்.
42) சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
43) தூண்டாத திரியும் கெடும்.
44) தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
45) காய்க்காத மரமும் கெடும்.
46) காடழிந்தால் மழையும் கெடும்.
47) குறிபிறழ்ந்தால் வேட்டை கெடும்.
48) குற்றம்பார்த்தால் சுற்றம் கெடும்.
49) வசிக்காத வீடும் கெடும்.
50) வறுமைவந்தால் எல்லாம் கெடும்.
51) குளிக்காத மேனி கெடும்.
52) குளிர்ந்துபோனால் உணவு கெடும்.
53) பொய்யான அழகும் கெடும்.
54) பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
55) துடிப்பில்லா இளமை கெடும்.
56) துவண்டிட்டால் வெற்றி கெடும்.
57) தூங்காத இரவு கெடும்.
58) தூங்கினால் பகலும் கெடும்.
59) கவனமில்லா செயலும் கெடும்.
60) கருத்தில்லா எழுத்தும் கெடும்.


Watson Property Management
wpm
We Pro-Manage your Properties!

FREE
FOR CONSULTATION/ SUGGESTIONS!
**416 284 9999**

**WATSON PROPERTY MANAGEMENT**

**About Us**

With 30 years of experience in real estate, we proudly manage over 100 properties for diverse landlords, including:
- ✓ Foreign property owners
- ✓ Multi-property investors
- ✓ First time buyers looking to maximize their property Value

We ensure cost-effective and hassle-free property management, handling everything from marketing to maintenance.

**Our Services**

- **Effective Marketing** – Maximize property exposure.
- **Property Showings** – Find the right tenants.
- **Tenant Screening** – Secure reliable and responsible renters.
- **Lease Preparation** – Handle all paperwork.
- **Move-in Assistance** – Stress-free key handovers.
- **Rent & Utilities Collection** – Timely payments guaranteed.
- **Regular Inspections** – Regular walkthroughs every 6 months.
- **Affordable Maintenance** – Trustable handymen with cost effective repairs.
- **Market Updates** – Stay informed on property value.
- **Lease Renewals & Rent increase** – Maximize rental income.
- **Financial Reports** – Year-end accounting for tax purposes.
- **Legal Notices & Paralegal Support** – Professional paralegal guidance.
- **Move-out Management** – Key collection and final walkthroughs.

MANAGING OVER 100 PROPERTIES ACROSS VARIOUS CITIES AND TOWNS WITHIN A 2-HOUR RADIUS OF TORONTO.




AJAX
BRAMPTON
BOWMANVILLE
BEAVERTON
COURTICE
ETOBICOKE
KESWICK
KINGSTON
MARKHAM
VAUGHAN
STOUFFVILLE
KITCHENER
MISSISSAUGA
NORTH YORK
OSHAWA
PICKERING
SCARBOROUGH
TORONTO
TRENTON
WHITBY
WATERLOO
NIAGARA
NEWCASTLE
RICHMOND HILL



**We're Expanding & Hiring!**

As we CONTINUE TO GROW and serve more areas, we're looking for reliable handymen to join our trusted maintenance NETWORK.
If you're a skilled handyman OR know someone who is we'd love to hear from you! WE'D love to work together.

**REACH US @: 416 284 9999**

# குடும்ப வன்முறை: ஒரு சமூகப் புற்றுநோய்



யதுசனா சவுந்தரராசா
யாழ்ப்பாணம்

அன்பால் வளர்க்கப்படும் பயிர் செழிக்கும் அடியால் அடிக்கப்படும் மரம் உலரும் என்பது போல, அன்புதான் ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு உறவையும், ஒவ்வொரு சமூகத்தையும் தாங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த அன்பு குன்றி, அதற்குப் பதில் வன்முறை வேரூன்றும்போது, அது ஒரே ஒரு குடும்பத்தை மட்டும் அல்ல முழு சமூகத்தின் அமைதியையும் குலைக்கிறது. வீட்டுக்குள் வன்முறை என்பதைக் கேட்டால், பலருக்கும் முதலில் நினைவுக்கு வருவது அது அவர்களது வீட்டுப் பிரச்சினைதான், வெளியே பேச வேண்டியதில்லை என்பதுதான். ஆனால் உண்மையில், அது ஒரு சுவர் கடந்து அடுத்த சுவருக்கும், அடுத்த தலைமுறைக்கும், அடுத்த சமூகத்திற்கும் பரவும் நெருப்பு. அடிகள் திட்டல்கள் காயங்கள் இவை வெளியில் தெரியாமல் போகலாம். ஆனால் மனதில் விழும் காயங்கள் வாழ்நாள் முழுவதும் அழியாமல் நிற்கின்றன. காயம் ஆறலாம் கண்ணீர் உலரலாம். ஆனால் உள்ளத்தில் பதிந்த வேதனை மறையாது என்பது பாதிக்கப்பட்டோரின் வாழ்வின் உண்மை.

வீட்டு வன்முறைகள் பெரும்பாலும் பெண்களை நோக்கியே பிரயோகிக்கப்படு கின்றன. பெண் என்பவள் ஒரு வீட்டின் அச்சாணி. அந்த அச்சாணி சிதைந்தால் வீடே சிதறும். அடிக்கடி அடியையும் இழிவையும் தாங்கும் பெண்கள், பெரும்பாலும் வெளியில் சிரிப்புடன் நடந்து கொள்கின்றனர். ஆனால் உள்ளுக்குள் அவர்கள் எவ்வளவு முறிந்து போயிருக் கின்றனர் என்பதைக் காட்டுவதற்கே வார்த்தைகள் போதாது.

ஒரு குழந்தை அடிக்கடி தாய் அழுவது, தந்தை கோபத்தில் அடிப்பது, கண்ணீர், சத்தம், பயம் நிறைந்த சூழலில் வளர்ந்தால் என்ன ஆகும்? அந்தக் குழந்தையின் உள்ளத்தில் பயம் என்ற விதை நட்டுவிடப்படுகிறது. சிலர் தங்களை



மூடி, மௌனமாகி விடுகின்றனர். சிலர் வெளிப்படையாக வன்முறையையே பழகி, பிறகு சமூகத்தில் அதையே தொடர்ந்து செய்கின்றனர். குழந்தைகள் என்ன பார்க்கிறார்களோ, அதையே எதிர் காலத்தில் செய்கின்றனர்.

வீட்டுக்குள் வன்முறை என்பது ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை மட்டுமல்ல. அது சமூகத்தின் அடித்தளத்தை உலுக்கும் பிரச்சினை. நீதிமன்ற வழக்குகளில் பெரும் பகுதி குடும்பத் தகராறுகளால் நிரம்பி யுள்ளது. பொருளாதார உற்பத்தித் திறன் குறைகிறது. சமூக நம்பிக்கை சிதை கிறது. வீடு அமைதியாயின் ஊர் அமைதி யாகும். ஊர் அமைதியாயின் நாடு அமைதியாகும். வீடு சிதைந்தால், நாடே சிதையும்.

இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் இது மிகப்பெரிய பிரச்சினை. புள்ளிவிவரங்களின்படி, 3 பெண்களில் ஒருவராவது வாழ்க்கையில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். பல கிராமப்புறங்களில் பெண்கள் காவல்துறையிடம் புகார் செய்ய அஞ்சுகின்றனர். காரணம் அது வீட்டுக்குள் பிரச்சினை என்று சொல்லி திருப்பி அனுப்பப்படுவோம் என்ற பயம். சிலர் தங்களை, குழந்தைகளைக் காப்பாற்ற எங்கேயும் போகமுடியாமல், அமைதி யாகக் கடந்து விடுகின்றனர். இதனால்த் தான், வீட்டுக்குள் வன்முறை தனிப்பட்ட பிரச்சினை அல்ல முழு சமூகத்தையும் பாதிக்கும் புயல் என்று கூறப்படுகிறது.

மது, மற்றும் ஏனைய போதைப் பொருட்களின் எல்லையற்ற நுகர்வும் இதற்கு பெரும் காரணமாக அமைகின் றன. அடிக்கடி மதுவில் மூழ்கிய கணவர், கோபத்தை மனைவியிடம் வெளிப்படுத்து கிறார். பொருளாதார அழுத்தம், வேலை இழப்பு, கடன்சுமை ஆகியவை கோபத்தை யும் வன்முறையையும் தூண்டும். ஆணாதிக்க சிந்தனை, பெண் என் சொத்து என்ற பழைய தவறான நம்பிக்கை இன்னும் பலரின் மனதில் வாழ்கிறது. சட்டத்தின் மெதுவான நடை, புகார் கொடுத்தாலும் நடவடிக்கை எடுப்பதில் தாமதம், சமூகத்தின் அலட்சியம், அது அவர்களது வீட்டு விடயம் என்று அண்டை வீட்டார் பக்கவாட்டாக நடந்து கொள்வது.

இதற்கு தீர்வு என்ன என நோக்கின், முதலில், கல்வி முக்கியம். சிறு வயதில் இருந்தே குழந்தைகளுக்கு மரியாதை, சமத்துவம் கற்பிக்கப்பட வேண்டும். பெண்கள், ஆண்கள் ஒரே மாதிரி மனிதர்கள், அவர்களுக்கு உரிமைகள் ஒன்றே என்பதைக் குழந்தைகளின் மனதில் விதைக்க வேண்டும். சட்டத்தின் முன் புகார் கொடுக்கும் பெண்களுக்குப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். அண்டை வீட்டில் சத்தம் கேட்டால், பக்க வாட்டாக நடந்து கொள்ளாமல், உதவி செய்யும் மனப்போக்கு வேண்டும். ஒவ்வொருவரும் அடுத்தவரின் வலியைப் பார்க்கும் மனசாட்சியுடன் இருக்க வேண்டும். ஒருவரை அடித்துக் கொண்டிருப்பதை பார்த்தும் நாமே கவலைப்படாமல் இருந்தால், நாளை நாமும் அந்த வன்முறையின் பங்குதாரர் களே. ஆண் ஆதிக்கம் என்ற பழைய சிந்தனையை உடைத்து, இருவரும் சமமாக வாழும் குடும்பம் உருவாக வேண்டும். மருத்துவ மற்றும் மனநல உதவி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல்நல சிகிச்சை மட்டுமின்றி மனநல ஆலோசனையும் அளிக்கப்பட வேண்டும். குடும்பம் என்பது மனிதருக்கு முதல் பள்ளி. அந்த பள்ளியில் வன்முறை, அவமதிப்பு, அடக்குமுறைதான் கற்றுக் கொடுக்கப்பட்டால், எதிர்காலம் எப்படித் தான் இருக்கும்? குடும்ப வன்முறை என்பது பெண்களை மட்டுமல்ல, ஒரு முழு தலைமுறையைப் பாதிக்கிறது. அதனால்தான் பயிருக்கு தீங்குதரும் களைகளை வேருடனேயே பிடுங்கி விடுவதுபோல இப்பாரிய பிரச்சினைகளுக் கும் ஆரம்பத்திலேயே தீர்வு காண்பது சாலச் சிறந்தது.

வீட்டுக்குள் வன்முறை என்பது கையால் அடிப்பது மட்டும் அல்ல அது ஒருவரின் உள்ளத்தையே அடக்கும் செயல். "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்கிறது திருக்குறள். காயங்கள் ஆறலாம். ஆனால் மனதில் பதியும் அச்சம், அவமானம், தாழ்வு உணர்வு எப்போதும் ஆறாது. குடும்பம் ஒரு சமூகக் கண்ணாடி. நம்முடைய கலாசாரம், நம்முடைய மனோபாவம், நம்முடைய கல்வி எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்பதைக் காட்டும் அடிப்படை அலகு அது. பெண்ணை மதித்த சமூகமே வளரும் என்று தமிழர் எப்போதும் நம்பினர். அந்த மதிப்பை மீண்டும் உயிர்ப்பிக்காமல், எந்த முன்னேற்றமும் முழுமையாக இருக்காது.

இன்றைய சமூகத்தில் குடும்ப வன் முறையை நிறுத்துவது சட்டம் அல்லது அரசு மட்டும் செய்யக்கூடிய வேலை அல்ல. அது ஒவ்வொரு மனிதனின் பொறுப்பு. வீடு என்பது கல்லாலும் சீமெந்தாலும் ஆன கட்டடம் அல்ல. அது அன்பாலும் புரிதலாலும் ஆன உறவு. அந்த அன்பைப் பாதுகாக்க வேண்டும் என்றால், ஒவ்வொருவரும் விழிப்புணர்ச்சியோடும் துணிச்சலோடும் நிற்க வேண்டும். பெண்ணின் கண்ணீரை சாதாரண விடயம் என்று பார்த்தால், நாளைய சமூகமே பலவீனமடைந்து போகும். ஆகையால், குடும்ப வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுப்பது ஒருவரின் கடமை மட்டுமல்ல, மனிதனாக இருப்பதற்கான அடிப்படை சான்றுமாகும்.

## வாக்குறுதிகளை...

6ஆம் பக்கத்தொடர்ச்சி

தேர்தல்களில் காட்டிக் கொள்ளலாம்.

தேர்தலுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் மக்களின் கொள்கை விடயங்களில், பிரச்சினைகளை கையாளுவதில், ஒருமித்து செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது. ஆனால் அதனை அவர்கள் பொருட்டாகக் கருதுவதே இல்லை.

சிலவேளைகளில் சில முயற்சிகள் வெற்றி யளித்தாலும், பல முயற்சிகள் தோல்வி யிலேயே முடிவடைகிறது.





**நீங்கள் என்னை ஒரு அடி தள்ளி வைக்க ஆசைப்பட்டால் நான் உங்களை விட்டு பத்து அடி தள்ளி நிற்பேன்.**
**நீங்கள் என்னை ஒதுக்கிவைக்க ஆசைப்பட்டால் நான் உங்களை மறந்தே விடுவேன்**

## நானிலம் போற்றும்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்தப் பாடலில் தலைவி தனது நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றாள்.

பதினெண்கீழ்க்கணக்கு நூலான கைந்நிலை நூலில் தோழியின் பங்களிப்பைப் பார்க்கும் பொழுது நட்பு எவ்வாறு உளவியல் ரீதியில் ஆளுமை செலுத்துகின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இங்கே எடுத்துக் கொள்ளப்பட்ட பாடல்கள் குறிஞ்சி நிலத்தில் தலைவன், தலைவி, தோழி மூவர்க்குமான வாழ்வியல் தொடர்பாடு களை அழகாகச் சித்தரிக்கின்றன.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

# கவிஞர் கண்ணதாசனின் “கவிஞன் நான் ஒரு காலக்கணிதம்” ஓர் மெய்யியல் நோக்கு



**K. ANANTHANATHAN,**
MA, MSW, RSW (Registered Social Worker with OCSWSSW)
kananthan2003@gmail.com

### கடந்த இதழ் தொடர்ச்சி...

**விளக்கம்/சாராம்சம்**

“கவிஞன் யானோர் காலக்கணிதம்”
கருப்படுபொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவை சரியென்றால் இயம்புவதென் தொழில்
இவை தவறாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக!

“கவிஞர் யானோர் காலக்கணிதம்” என்றாலென்ன என்றால் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் அறிந்து இருப்பதால் காலத்தைக் கணித்துச் சொல்லக் கூடிய ஒரு காலக்கணிதம். இவர்களைத்தான் காலக்கணிதர்கள் என்று அழைப்பர். இத்தொழில் அல்லது இக்குலத்தில் பிறந்தோரைத்தான் கணியன் என்று அழைப்பர். கவிஞனாக இருப்பதாலேயே 'நான் ஓர் காலக் கணிதம்' என்கிறார் கவியரசு கண்ணதாசன்.

கருப்பொருளை உருப்பட வைப்பேன் _ என்மனதில் கருப்பொருளாகத் தோன்றிய கருத்துகளை (எண்ணக் கருத்துகளை) உருப்பொருளாக, கவிதைகளாக அல்லது பாடல்களாக கதையாக கட்டுரையாக இலக்கியமாக மாற்றித் தருபவன்.

“புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்”. புகழ்பெற்றிருப்பதனாலேயே பூமியில் இருக்கின்ற பல தெய்வங்களைப்போல நானும் ஒரு தெய்வம்.

“பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்! இவை சரியென்றால் இயம்புவதென் தொழில்” - இவை சரிஎன்று என்மனதில் தோன்றியவற்றைக் கவிகளில் எடுத்தியம்புவது என் தொழில். இவை தவறு என்று மனதிற்குத் தோன்றியவற்றை எதிர்ப்பதும் என்வேலை.

“ஆக்கல், அளித்தல், அழித்தல் இம்மூன்றும் (இறைவனும் நானும்) அவனும் யானுமே அறிந்தவை”-ஆக்கல்-படைத்தல் அளித்தல்-கொடுத்தல்/காத்தல். அழித்தல் -நீக்குதல்/ஒடுக்குதல். இறைவனுக்கும் எனக்கும்தான் இம்மூன்றும் தெரியுமென்கிறார். இம்மூன்றையும் தான் நானும் அவனும் (இறைவனும்) செய்கின்றோம். அதாவது இலக்கியங்களைப் படைக்கிறேன். படைத்தவற்றை மக்கள் இன்புறக் கொடுக்கிறேன். தீய கருத்துகளை ஒடுக்குகிறேன்.

“செல்வர்கள் கையில் சிறைப்பட மாட்டேன்!” பதவிவாளுக்கும் பயப்பட மாட்டேன்! பாசம் மிகுத்தேன்! பற்றுதல் மிகுத்தேன்!” ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்! உண்டாயின் பிறர் உண்ணத் தருவேன்! இல்லாயின் (எமர்) நண்பர்கள் இல்லம் தட்டுவேன். வண்டாயெழுந்து மலர்களில் அமர்வேன்! வாய்ப்புறத்தேனை ஊர்புறத் தருவேன்!” “செல்வர் தங்கையில் சிறைப்பட மாட்டேன்.” (இதன் அர்த்தம்) செல்வந்தர்களின் செல்வத்துக்கு மயங்கி அவர்களிடம் சிறைப்பட்டு அவர்களைப் புகழ்ந்து உரைக்கமாட்டேன் என்பதாகும்.

பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்” பதவியாகிய வாளுக்கும்(அதிகாரத்திற்கும்) பயப்படமாட்டேன்.

“பாசம் மிகுத்தேன்”-பற்றுதல் மிகுத்தேன்!” - பாசம் மிகுதியாகக் கொண்டவன் நான் (3 மனைவிகள் 15 பிள்ளைகள்). அத்தனைபேர் மேலும் பாசம் மிகுதியாகக் கொண்டவர் கவியரசு. பாசம் மிகுதியாகக் கொண்டவன், பற்றுதலும் (ஆசையும்) மிகுதியாகக் கொண்டவன் நான்.

“ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!” - நான் ஆசைப்படுபவை எவையோ அல்லது ஆசையைத் தருவன எவையோ அவை அனைத்தையும் கைப்பற்றுவேன்!

“உண்டாயின் உண்ணத்தருவேன்” - என்னிடம் பொருள் உள்ளது எனில் பிறர் பசி அகற்ற உண்ணத்தருவேன். உண்மையில் கவியரசு எத்தனை பேர்களுக்கு உதவினாரென்பதை எண்ணிட முடியாதெனக் கூறுவார் (மகன் காந்தி கண்ணதாசன் கூறுவார்).

“இல்லையாயின் எமர் இல்லம் தட்டுவேன்”-என்னிடம் பொருள் இல்லையாயின் (எமர்-நண்பர்) எம் நண்பர் இல்லம் சென்று கேட்கத் தயங்கமாட்டேன். சொந்தக் காரர்களிடம் அல்ல - முக்தா சீனிவாசனிடம் பட்ட கசப்பான அனுபவம்)

“அண்ணன் என்னடா தம்பி என்னடா” - 'பழநி' சினிமாப்பாட்டு மூலம் இக்கசப்பான அனுபவத்தை கவியரசு விளக்குவதை இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும். கவியரசின் சகோதரர் முக்தா சீனிவாசன்).

“வண்டாயெழுந்து மலர்களில் அமர்வேன்” - வண்டு மலர்களில் அமர்வதுபோல் பெண்களை நாடிச்சென்று சுவைப்பேன். இதனைப் பொறுத்தவரை மக்கள் மத்தியில் ஒரு தவறான புரிதல் உண்டு. அதனை விளக்குதல்-விளங்குதல் வேண்டும்.

“என்னைப் பின்பற்றாதீர்கள் - என் கவிதைகளைப் பின்பற்றுங்கள்” என்கிறார் கவியரசு. (“ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு” என்ற பாடலை இவ்விடத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.) என்னுடைய தத்துவப்பாடல்களை, அறக்கருத்துகளைப் பாருங்கள். பின்பற்றுங்கள் என்று கவியரசு கூறுகிறார்.

தொடரும்...

## நாமும் நமது...

**8ஆம் பக்கத்தொடர்ச்சி**

இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் இவர் அடுத்த ஏழு (7) வருடங்களிற்குக் கடன் பெறுவதில் பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். இவர் போன்ற பலர் இவ்வாறான நிலைமையில் சிக்கியுள்ளனர்.

மொத்தமாகப் பார்த்தால், 2022ஆம் ஆண்டிலிருந்து 2025ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை சராசரி அடுக்கு மனையின் விலை 16.5%இனால் குறைந்துள்ளது. (எனினும் இடத்திற்கு இடம் வேறுபடும்)

நிர்மாண முதலீட்டாளர்கள் வியாபார நோக்கத்திற்கும் ஓர் அறை, இரு அறை அடுக்குமனைகளையே அதிகமாக உருவாக்கினர். இம்மனையில் பிள்ளைகளுடன் குடும்பங்கள் வாழ்வது இலகுவல்ல.

முதலீட்டாளர்கள் சந்தையிலிருந்து ஒதுங்கியதால் வியாபாரம் குறைந்தது. அத்துடன் குடும்பங்களும் இவ்வாறான மனைகளை வாங்குவதனைத் தவிர்ப்பதால், வியாபாரம் மேலும் இறங்குகின்றது.

2022ஆம் ஆண்டிற்கும் 2025ஆம் ஆண்டின் முதல் கால்பகுதிக்கும் (Q1) இடையில் ரொறொன்ரோவில் 75%மும், வன்கூவரில் 37%மும் அடுக்குமனை வியாபாரம் குறைந்துள்ளது.

இதனால் 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு (6) மாதங்களில் புதிய நிர்மாணமும் 44%இனால் குறைந்துள்ளது.

புதிய வாங்குவோர் இல்லாததால் பல அடுக்குமனைத் தொகுதிகள் வாடகைக்கு கொடுப்பதற்கேற்ப, வாடகைக்கு கொடுக்க கூடிய கட்டிடத் தொகுதியாக மாற்றப்படுகின்றன.



விலை கூடிய காலத்தில் அடுக்குமனைகளைக் கொள்வனவு செய்த பலர் இவ்வாறு பணத்தைத் தொடர்ந்து இழந்து வருவதனைக் காணலாம். எனினும், ஒருசில அனுபவமிக்க முதலீட்டாளர்கள் வாழ்வில் முதல் தடவையாக ஆதனம் வாங்குவோர் இந்நிலைமையை தமக்கேற்ப சாதகமாக மாற்றுவதனையும் காணக்கூடியதாக உள்ளது.

எனினும், தகுந்த நேரத்தில் தகுந்த இடத்தில் ஆதனத்தை அனுபவமிக்க முகவர்களினூடாக கொள்வனவு செய்வது நீண்டகாலத்தில் நன்மையை கொடுக்கும்.



# கூலி – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் நடிப்பில் ஓகஸ்ற் 14ஆம் திகதி வெளியான திரைப்படம் கூலி.

இந்த படத்தில் தேவா (ரஜினி) என்பவர் ஆண்கள் தங்கும் விடுதி ஒன்றை நடத்தி வருகிறார். ஒருநாள் அவரது நெருங்கிய நண்பன் ராஜசேகர் (சத்யராஜ்) இறந்து விட்டதாக அவருக்கு செய்தி வருகிறது.

ராஜசேகரின் வீட்டிற்குச் சென்ற தேவாவை ராஜசேகரின் மூத்தமகள் பிரீத்தி (ஷ்ருதிஹாசன்) ஏசி வெளியேற்றுகிறார். இருந்தாலும் தேவா பிரீத்தியையும் அவளது தங்கைகளையும் மறைமுகமாகப் பாதுகாத்து வருகிறார்.

ராஜசேகர் இயற்கையான காரணத்தால் இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டாலும், தேவா அவர் அடித்துக் கொல்லப்பட்டார் எனக் கண்டுபிடிக்கிறார்.

ராஜசேகரைக் கொன்றவர்கள் யார்? ஏன் கொன்றனர்? ஏன் பிரீத்திக்கு தேவாவைப் பிடிக்கவில்லை? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.



நீண்டகாலத்திற்குப் பின்னர் ரஜினிகாந்தின் வழமையான படத்தின் அம்சங்களான பாடல், சண்டை என்பவற்றுடன் இப்படம் வெளியாகி இருக்கிறது.

இப்படத்தின் முக்கிய கதாபாத்திரங்களின் நடிப்பு நன்றாக இருந்தது. குறிப்பாக கதாநாயகன் கதாபாத்திரத்தை விட்டுவிட்டு முதல்முறையாக வில்லனாக நடித்த நாகர்ஜுனாவின் நடிப்பு வித்தியாசமாக இருந்தது.

படத்தில் முக்கிய கதாபாத்திரங்களின் அமைப்பில் சில சிறப்புகள் இருந்தன. உதாரணத்திற்கு வில்லன் தனது தொழிலில் பங்குபெறாத மகன் மீது அன்பு காட்டுகிறார். மறுபக்கத்தில் கதாநாயகன் நண்பனின் மகள் மீது அன்பு காட்டினாலும், அவள் அவரை வெறுக்கிறார். இந்த வேறுபாடு படத்தை வித்தியாசப்படுத்துகிறது.



ஆனால், பிரபல கதாநாயகி நடித்திருந்தாலும் இப்படத்தில் அவர் பெரும்பாலான நேரம் வன்முறையில் சிக்குப்பட்டு உதவி தேவைப்படும் நிலையில் இருப்பதால், அவருக்கு முக்கியத்துவம் இருந்தும் நடிப்பிற்கு வேலை தேவைப்படவில்லை.

கல்யாணி என்ற பெண் கதாபாத்திரத்தின் பங்கு வித்தியாசமானதாகவும் எதிர்பாராத விதமாகவும் அமைந்தது நன்றாக இருந்தது.

தேவா-ராஜசேகர் உறவு இப்படத்திற்கு மிகவும் முக்கியமாக இருந்தாலும் அது போதியளவு ஆழமுடையதாகக் காட்டப்படவில்லை.

இப்படத்தில் சண்டை, கொலைக் காட்சிகள்மூலம் வன்முறை அதிகம் இருந்தாலும், பெண்களுக்கு எதிரான வன்முறை இல்லாமல் இருந்தது நன்று. சமூகப் பிரச்சினையிலிருந்து துப்பறியும் கதைகள் பற்றிக் கூறும் படங்கள் வரை அண்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறை முக்கியமாக இடம்பெற்று வருகின்றது. இவ்வாறான நிலையில் இப்படத்தில் பொதுவான வன்முறை இருந்தாலும் கதையில் பெண்களுக்கு எதிரான வன்முறையை இயக்குநர் தவிர்த்தது குறிப்பிடத்தக்கது.

அதிரடிச் சண்டைக் காட்சிகளுடைய படங்களைப் பார்க்க விரும்புவோரும், ரஜினியின் ரசிகர்களும் இப்படத்தை விரும்பிப் பார்க்கலாம்.

## விஜய் வெற்றி...

9ஆம் பக்கத்தொடர்ச்சி

குறித்து எதிர்க் கட்சிகள் ஆதாரத்துடன் நிரூபித்தும் அதை சற்றும் அலட்சியம் செய்யாத பாஜகவின் செயல்பாடு பற்றியோ விமர்சிக்கவே இல்லை. இதற்கெல்லாம் மேலாக சிறுபான்மையினர் மீது கட்டவிழ்த்து விடப்படுகிற திட்டமிட்ட செயல்பாடுகள் பற்றியோ ஆர்.எஸ்.எஸ் ஸின் ஆதிக்கம் குறித்தோ எதுவுமே பேச வில்லை. வெறுமனே பாசிசம் என்று குறிப்பிட்டதோடு பாஜக குறித்த அவருடைய பேச்சின் எல்லை சுருங்கிவிட்டது.

அதைப்போலவே, திமுக அரசைப்பற்றி அதன் சட்டம் ஒழுங்கு சீர்குலைவைப் பற்றியெல்லாம் பேசியவர், மிகமிக அண்மையில் சென்னையில் பதின்மூன்று நாட்களாகப் போராடிய துப்பரவுத் தொழிலாளர்கள் காவல்துறையின் கடும் தாக்குதலுக்கு உள்ளானதைப் பற்றியும், மாநாடு நடந்த அதே மதுரையில் தற்போதும் போராட்டத்தை நடத்திவரும் தூய்மைப் பணியாளர்கள் குறித்தும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. மிக சமீபத் தில் காவல்துறையால் தாக்கப்பட்டு உயிர் இழந்த அஜித்குமார் குறித்தோ, கவின் என்கின்ற இளைஞர் ஆணவப் படு கொலை செய்யப்பட்டது பற்றியோ எந்தச் சிறுகுறிப்பும்கூட விஜயின் பேச்சில் இடம் பெறவில்லை.

மக்களுடைய சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தாத மாநாடோ பொதுக்கூட்டமோ எதுவாக இருந்தாலும் அதனால் பலனே இல்லை" என்றார், அய்யநாதன்.

என்றாலும், விஜய் முதல் மாநாட்டில் பேசியதைவிட இப்போது தேறி உள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது. எத்தனையோ தடைகள் அடுத்தடுத்து விதிக்கப்பட்டும் அதையெல்லாம் மீறி லட்சக்கணக்கில் ரசிகர்களும் தொண்டர் களும் வந்து குவிந்தது ஆச்சர்யம்தான். விஜய்யின் ஆவேசமான, கேலி கலந்த, இடையில் பாடலும் கலந்த பேச்சுக்கு அவரது ரசிகர்களிடையே பெருத்த வரவேற்பு இருந்ததை மறுக்க முடியாது.

அரசியல் விமர்சகர் இளமாறன், "மற்ற கட்சிகள் எல்லாம் கட்சி தொடங்கியபின் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் நுழைய முயற்சிக்கின்றனர். ஆனால், விஜயோ



ஏற்கனவே ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் நுழைந்துவிட்டுதான் கட்சியையே தொடங்கி யுள்ளார். இத்தனை ஆண்டு காலம் சினிமாவில் கதாநாயகனாக நடித்ததன் விளைவாக தமிழகத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான இளைஞர்களிடம் விஜய் மீது ஓர் ஈர்ப்பு உருவாகி உள்ளது.

சினிமா கதாநாயகர்களின் கவர்ச்சி அரசியல் பார்முலாவைத்தான் விஜயும் உயர்த்திப் பிடிக்கிறார். நாடகத்தில் இருந்து சினிமாவுக்கு வந்த சிவாஜியிடம் கேமரா தேவைக்கு அதிகமான நடிப்பு இருக்கும் என்பர். இப்போது சினிமாவில் இருந்து வந்துள்ள விஜய் மாநாடு மேடைக்கேற்ப முகபாவங்களைக் கூட்டி நடிக்க முயற்சிக்கிறார். ஓரளவு வென்றும் உள்ளார். குரலில் ஏற்ற இறக்கங்கள் உணர்ச்சி ததும்பும் உச்சரிப்புகள் என தான் ஒரு நடிகன் என்பதை அழுத்த மாகவே நிரூபிக்கிறார். பஞ்ச் டயலாக் நன்றாகத்தான் இருக்கிறது. ரசிகனை, தொண்டனை உசுப்பி விடுவதற்கு இத்தகைய பேச்சுகள் போதும் என்பது விஜயின் கணக்கு. ஆனால், அது மட்டுமே வெற்றிக்குப் போதுமா என்பதை 2026 தேர்தல் அவருக்கு உணர்த்தும்" என்றார்.

"பாஜகவையும் திமுகவையும் விமர்சிப்ப தன் மூலம் இரண்டு கட்சிகளின் எதிர்ப்பு ஓட்டுகளையும் ஈர்க்க விஜய் முயற்சிப்பது தெரிகிறது. இதனடிப்படையில், திமுக - அதிமுகவிற்கு மாற்று என்று 8 சதவிகித ஓட்டுகளை அறுவடை செய்துவந்த சீமானின் ஓட்டுவங்கி வீழ்க்கூடும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் விஜய் 8 - 15% வரை ஓட்டுகளை அறுவடை செய்ய வாய்ப்பிருக்கிறது" என்பதும் பலரது கணிப்பாக இருக்கிறது.

ஆனாலும், "தன்னுடைய முதல் மாநாட்டு உரையிலேயே தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைப்போம் என்று விஜய் அறிவித்த பிறகும் இதுவரை தவெக கூட்டணிக்கு தமிழகத்தில் உள்ள சிறு கட்சிகள்கூட வராதது ஏன் என்பதை விஜய் நினைத்துப் பார்த்தாரா?" என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். "விஜய் தனித்து போட்டியிட்டால் இன்னொரு சீமானாகத்தான் ஆகமுடியும்" என்கிறார் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ்.

நம்முடன் பேசிய திரைப்பட இயக்குநரும் எழுத்தாளருமான ராசி அழகப்பன், "ஒரு கட்சியின் மாநில மாநாடு என்பது அடுத்த ஓர் ஆண்டுக்கான அரசியல் பயணத்தின் முகாந்திரமாக இருக்கும். ஆனால், விஜயின் பேச்சு அவரை விமர்சிப்பவர் களுக்கு எல்லாம் பதிலளிக்கும் வகையில் தான் இருந்தது. எனவே, இந்த மாநாடு என்பது தன்னிலை விளக்கம்தான். விஜய்க்கு முன்னால் மிகப்பெரிய கூட்டம் இருக்கிறது. ஆனால், அக்கூட்டத்திடம், நான் எதற்கு வந்திருக்கிறேன் என்று சொல்வதற்கான உறுதிமொழிகள் விஜயிடம் இல்லை.

எம்ஜிஆர் வீதிகளில் நடந்துசென்று மக்களோடு மக்களாக இருந்தார். எம்.ஜி.ஆர். போல் வரலாற்றை மாற்ற வேண்டுமென்றால் விஜய் ஒவ்வொரு வீதிக்கும் செல்ல வேண்டும். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் அதை நோக்கி அவர் என்ன செய்தார்? இன்னும் ஓராண்டுதான் உள்ளது. மக்களை சந்திக்காமல் விஜய் வெற்றிபெற முடியாது" என்றார், ராசி அழகப்பன்.

2026 மே மாதம் இதற்கெல்லாம் விடை தெரிந்துவிடும். காத்திருப்போம்.



**மனித நாக்கு எலும்புகள் இல்லாததுதான். ஆனாலும் அது ஓர் இதயத்தையே உடைக்கும் அளவிற்கு வலிமை கொண்டது...**